Registered as a Newspaper

# உதயன்

பக்கங்கள் 12

விலை ரூ. 50

சுடர் : 38
கதிர் : 303

திங்கட்கிழமை 25 செப்ரெம்பர் 2023

... ண்டு 2054



தமிழ் மக்களின் வாழ்வுக்காக உயிர்நீத்த

# தியாகதீபம் திலீபனின் நினைவேந்தல் நாளை

## தாயகத்திலும், புலம்பெயர் தேசங்களிலும் உணர்வெழுச்சியுடன் அஞ்சலிக்க ஏற்பாடு

**யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 25**

**தமிழினத்தின் எதிர்காலத்துக்காகத் தன்னுயிரை ஈந்த தியாகி திலீபனின் 36ஆவது ஆண்டு நினைவேந்தல் நாளை தமிழர் தாயகத்திலும், புலம்பெயர் தேசங்களிலும் உணர்வெழுச்சியுடன் கடைப்பிடிக்கப்படவுள்ளது.** »11



## திலீபன் ஆவணக் காட்சியகத்தை பார்வையிட்டார் சரவணபவன்

யாழ்ப்பாணம், செப்.25

நல்லூரில் அமைக்கப்பட்டுள்ள தியாகதீபம் திலீபன் ஆவணக் காட்சியகத்தை நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈ.சரவணபவன் நேற்றுப் பார்வையிட்டார். அங்குள்ள தியாகதீபம் திலீபன் திருவருவப்படத்துக்கு மலர்மாலை அணிவித்து »11

ஜனாதிபதி ரணில் பங்கேற்பதற்காக

## மீலாத்துல் நபி விழா ஒத்திவைப்பு

மன்னார், செப்.25

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கலந்துகொள்ள வேண்டும் என்பதற்காக தேசிய மீலாத்துல் நபி விழா பிற்போடப்பட்டுள்ளது. »11

## அமெ. எரிபொருள் நிறுவனம் அடுத்த மாதம் இலங்கையில்!

கொழும்பு, செப்.25

அமெரிக்காவைத் தளமாகக் கொண்ட 'ஆர்.எம் .பார்க்ஸ்' நிறுவனம் அடுத்த மாதம் இலங்கையில் எரிபொருள் விநியோகத்தை ஆரம்பிக்கும் என்று மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சின் மூத்த அதிகாரி ஒருவரை மேற்கோள்காட்டி செய்திகள் வெளியாகியுள்ளன.

எரிபொருளை இறக்குமதி செய்து விநியோகிப்பதற்கும், விற்பனை செய்வதற்கும் உரிய உடன்படிக்கையில் இந்த »11

## கடத்திச்சென்று கொள்ளை; சந்தேகத்தில் மூவர் கைது

யாழ்ப்பாணம், செப்.25

ஒருவரை மோட்டார் சைக்கிளில் கடத்திச் சென்று தாக்கி, கைபேசி மற்றும் கைக்கடிகாரம் என்பவற்றைக் கொள்ளையிட்ட குற்றச்சாட்டில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வீதியில் சென்ற ஒருவரை மோட்டார் சைக்கிளில் வந்த மூவர் கடத்திச் சென்று »11

## தாய்ப்பால் அருந்தியபின் உறங்கிய குழந்தை சாவு!

யாழ்ப்பாணம், செப்.25

தாய்ப்பால் அருந்திவிட்டு உறங்கிய 3 மாதக் குழந்தை ஒன்று உயிரிழந்துள்ளது. இந்தச் சம்பவம் நேற்று வட்டுக்கோட்டை மேற்குப் பகுதியில் நடந்துள்ளது. கி.கரிகரன் என்ற ஆண் குழந்தையே இவ்வாறு »11



யாழ்ப்பாணம் வந்துள்ள தென்னிந்தியத் திரைப்பட இசையமைப்பாளர் சந்தோஷ் நாராயணனும், அவரது பாரியாரும் நேற்று தியாக திலீபன் நினைவுத் தூபிக்குச் சென்று அஞ்சலி செலுத்தினர். அங்குள்ள தியாக தீபம் திலீபனின் வரலாற்றை எடுத்தியம்பும் ஆவணக் காட்சியகத்தையும் பார்வையிட்டனர். (அ-எ-26-66)

## கிணற்றில் இருந்து ஆணின் உடல் மீட்பு!

யாழ்., செப்.25

ஏழாலை, மயிலங்காட்டில் உள்ள தோட்டக்கிணறு ஒன்றில் இருந்து ஆண் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். »11

ராஜீவ் கொலைவழக்கில் கைதாகி விடுவிக்கப்பட்ட

## சாந்தனை அழைத்துவரக்கோரி தாயார் தொடர்ச்சியாகக் கடிதம்

### வெளிவிவகார அமைச்சு பாராமுகம்

யாழ்ப்பாணம், செப்.25

இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் சிறைவைக்கப்பட்டு, தற்போது விடுக்கப்பட்டுள்ள சாந்தனை நாட்டுக்கு அழைத்துவர நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று சாந்தனின் தாயார் வெளிவிவகார அமைச்சுக்குக் கடிதம் அனுப்பியுள்ளார்.

இந்தக் கடிதம் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகம் ஊடாக வெளிவிவகார அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளது. »11

மீசாலையில்

## ரயில் முன் பாய்ந்து பெண் உயிர்மாய்ப்பு

யாழ்ப்பாணம், செப்.25

ரயில் முன் பாய்ந்து வயோதிபப் பெண் ஒருவர் உயிர் மாய்த்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று புத்தூர் சந்திக்கும், மீசாலைக்கும் இடைப்பட்ட பிரதேசத்தில் நடந்துள்ளது.

மீசாலை வடக்கைச் சேர்ந்த கிருஸ்ணராசா நாகேஸ்வரி (வயது-65) என்பவரே உயிரிழந்தவராவார். »11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்தாண்டில் மட்டும்

# 1,000 மருத்துவர்கள் சேவையிலிருந்து விலகல்!

**கொழும்பு, செப். 25**


**இந்த ஆண்டில் இதுவரையான காலப்பகுதியில் மட்டும் ஏறக்குறைய ஆயிரம் மருத்துவர்கள் சேவையிலிருந்து விலகியுள்ளனர் என்று அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவான 'கோபா' குழுவில் தெரியவந்துள்ளது.**

சுகாதார அமைச்சின் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கைகள் தொடர்பில் வழங்கப்பட்ட உத்தரவுகளின் முன்னேற்றம் மற்றும் தற்போதைய செயற்பாடுகள் குறித்து ஆராய 'கோபா' குழு அண்மையில் கூடியது.

இதன்போதே குழுவில் முன்னிலையாகிய பிரதிச் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் ஜீ.விஜேசூரிய மேற்படி விடயத்தைத் தெரிவித்தார்.

இதனால் சில சிகிச்சைப் பிரிவுகளில் 24 மணி நேர சேவைகளைப் பராமரிப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

தமது சேவைக்களுக்கான உரிய பெறுமதி இன்மையே மருத்துவர்கள் வெளிநாடு செல்வதற்குப் பிரதான காரணமாக அமைந்துள்ளது என்று குழுவில் பங்கேற்ற அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் மருத்துவர் ஹரித அளுத்கே தெரிவித்தார். (ச-இ)



## ஒன்ராறியோவின் அமைச்சராக ஈழத்தமிழர் விஜய்

கொழும்பு, செப். 25

கனடாவின் ஒன்ராறியோ மாகாண போக்குவரத்துத் துறை இராஜாங்க அமைச்சராக ஈழத்தமிழரான விஜய் தணிகாசலம் என்பவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

விஜய் தணிகாசலம் யாழ்ப்பாணம் - வல்வெட்டித்துறையை பூர்வீக இடமாகக் கொண்டவர்.

இவர் முன்னதாக கனடாவில் உட்கட்டமைப்பு அமைச்சரின் மாகாணசபை உதவியாளராகப் பணியாற்றி வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)

### நாணய நிதியத்துடன்

## பணியாளர்மட்ட ஒப்பந்தம் கைச்சாத்தாகிறது நாளை

கொழும்பு, செப். 25

சர்வதேச நாணய நிதியத்துக்கும் இலங்கைக்கும் இடையிலான பணியாளர் மட்ட ஒப்பந்தம் நாளை செவ்வாய்க்கிழமை கைச்சாத்திடப்படவுள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

சர்வதேச நாணய நிதியத்தின் அதிகாரிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையிலான கலந்துரையாடல் தற்போது கொழும்பில் இடம்பெற்று வருகிறது.

ஜனாதிபதிக்குப் பதிலாக ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானி சாகல ரத்நாயக்க இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்றுள்ளார்.

இதில் சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள், இலங்கையின் அடைவு மட்டம் மகிழ்ச்சி தருகிறது. சில துறைகளின் மெதுவான தன்மை உள்ளது என்றும் சுட்டிக்காட்டினர்.

இந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதன் பின்னர் சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாவது கடன் தவணை இலங்கைக்குக் கிடைக்கப்பெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## மாணவன் மீது சரமாரியாக தும்புத்தடியால் தாக்குதல்!

### வவுனியாவில் ஆசிரியர் வெறிச்செயல் ம.உ. ஆணைக்குழுவில் முறைப்பாடு

வவுனியா, செப். 25

வவுனியா நகர பிரபல பாடசாலை ஒன்றில் மாணவனை ஆசிரியர் தாக்கியதில் பாதிப்படைந்த மாணவன் வவுனியா மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அண்மையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வவுனியா நகரப் பகுதியில் அமைந்துள்ள பிரபல பாடசாலை ஒன்றில் தரம்-9இல் கல்வி கற்கும் குறித்த மாணவனை, பாடசாலையின் பகுதித் தலைவராகிய ஆசிரியர் தொடர்ச்சியாக ஒருவாரத்துக்கும் மேலாக தும்புத்தடி மற்றும் சப்பாத்துக் கால்களால் தாக்கியதாக பாதிக்கப்பட்ட மாணவன் தெரிவித்துள்ளார்.

"ஏன் என்னை அடிக்கிறீர்கள்?" என்று மாணவன் கேட்டதற்குப் பதில் கூறாத ஆசிரியர் மீண்டும் மீண்டும் தன்னைத் தாக்கினார் என்று மாணவன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இது தொடர்பில் மாணவனால் எழுதப்பட்டதாக நம்பப்படும் கடிதமொன்று அவருடைய பெற்றோரால் மீட்கப்பட்டது. இதையடுத்து பெற்றோர் நடத்திய விசாரணையில் விடயங்கள் வெளிப்பட அந்த மாணவன் சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். மருத்துவமனைப் பொலிஸாரிடம் இது தொடர்பில் முறையிடப்பட்டதைத் தொடர்ந்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். மனித உரிமைகள் ஆணைக்குழுவிலும் மாணவனின் தந்தையால் முறையிடப்பட்டுள்ளது. (ம-18)

### அமைச்சர் பத்திரணவுக்கு

## சுகாதார அமைச்சு விரைவில் மாற்றம்

கொழும்பு, செப். 25

அமைச்சர் மருத்துவக் கலாநிதி ரமேஷ் பத்திரணவுக்கு சுகாதார அமைச்சுப் பதவியை வழங்குவது தொடர்பில் அரசாங்கம் பரிசீலித்து வருகின்றதென அரசியல் வட்டாரங்களில் இருந்து அறிய முடிகின்றது.

தற்போது கைத்தொழில் மற்றும் பெருந்தோட்டத்துறை அமைச்சராகச் செயற்பட்டுவரும் ரமேஷ் பத்திரண, அந்தப்பதவியில் நீடிப்பதற்கு விரும்புவதால் சுகாதார அமைச்சுப் பதவியை ஏற்பது தொடர்பில் அவர் இன்னும் பச்சைக்கொடி காட்டவில்லை எனவும் தெரியவருகின்றது.

புதிதாக நான்கு அமைச்சர்களை நியமிக்க அரசு முன்னதாகத் திட்டமிட்டிருந்தது. எனினும், அந்தமுடிவு தற்போது கைவிடப்பட்டு, அமைச்சு விடயதானங்கள் கைமாற்றுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன்படி மூன்று அல்லது நான்கு அமைச்சுகளின் விடயதானங்கள் கைமாறக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அடுத்தவருடம் தேர்தல் வருடமென்பதால் புதிதாக அமைச்சர்களை நியமித்தால் அது ஜனாதிபதி மீதான நன்மதிப்பை இழக்கச் செய்யும் என சிரேஷ்ட ஆலோசகர்கள் சுட்டிக்காட்டியுள்ள நிலையிலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. சுகாதார அமைச்சர் பதவியில் இருந்து கெஹலிய ரம்புக்வெலவை நீக்குமாறு சுகாதார தொழிற்சங்கங்களும், சிவில் அமைப்புகளும் தொடர்ச்சியாக வலியுறுத்திவருகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம-44)

## பங்களாதேஷின் கடன் முற்றாக மீளளிப்பு!

### நிதி இராஜாங்க அமைச்சர் தகவல்

பொருளாதார நெருக்கடிக்காக பங்களாதேஷிடமிருந்து பெற்றுக்கொண்ட 200 மில்லியன் அமெரிக்க டொலர் கடனை முழுமையாகச் செலுத்திவிட்டோம் என்று நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

கடந்த 2021ஆம் ஆண்டு பங்களாதேஷிடமிருந்து 200 மில்லியன் அமெரிக்க டொலரை இலங்கை கடனாகப் பெற்றது. நாணயப் பரிமாற்று வசதியின் கீழ் பங்களாதேஷிடமிருந்து பெற்றுக்கொண்ட கடனில் முதல் தவணையாக 50 மில்லியன் அமெரிக்க டொலர் முன்னதாகச் செலுத்தப்பட்டது.

குறித்த கடனின் இறுதித் தவணையாக 50 மில்லியன் அமெரிக்க டொலரை இலங்கை கடந்த 21ஆம் திகதி செலுத்தியுள்ளது.

இந்தக் கடன் தொகைக்கு வட்டியாக 4.5 மில்லியன் அமெரிக்க டொலரும் செலுத்தப்பட்டுள்ளது. அந்தவகையில் பங்களாதேஷிடமிருந்து பெற்றுக்கொண்ட 200 மில்லியன் அமெரிக்க டொலர் கடன் வட்டியுடன் முழுமையாகச் செலுத்தி முடிக்கப்பட்டுள்ளது என்றும் நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார். (ச-இ)

## பாண் விலை குறையலாம்

கொழும்பு, செப். 25

ஒரு இறாத்தல் பாணின் விலையை 100 ரூபாவாகக் குறைக்க எதிர்பார்த்துள்ளதாக இலங்கை பேக்கரி சங்கத்தின் தலைவர் ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கை பேக்கரி சங்கத்தின் முயற்சியின்கீழ் எதிர்காலத்தில் அரசாங்கத்துடன் பேச்சு நடத்தி சுமார் 100 ரூபாவுக்கு ஒரு இறாத்தல் பாணை வழங்க ஏற்பாடு செய்யவுள்ளோம். அத்துடன் பணிஸ் ஒன்றின் விலையை 10 அல்லது 15 ரூபாவால் குறைக்க முடியும். ஆனால், அரசாங்கத்தின் ஒத்துழைப்பு இதில் அவசியம் என்றார். (ச-இ)

### மலேசியாவில்

## இலங்கையர் மூவர் கோரமாகக் கொலை

### சந்தேகநபர்கள் இலங்கையர்கள்

கொழும்பு, செப். 25

மலேசியாவில் இலங்கைப் பிரஜைகள் மூவர் கொடூரமாகக் கொலை செய்யப்பட்டுள்ளனர் என்று மலேசியப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வீடொன்றில் வாடகைக்குத் தங்கியிருந்த இருவரும் அந்த வீட்டுக்காரின் மகனுமே சடலமாக மீட்கப்பட்டுள்ளனர்.

உயிரிழந்த மூவரின் உடல்கள் ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கி வைக்கப்பட்டிருந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளன. அவர்களின் கைகள் கட்டப்பட்டு, தலைகள் பிளாஸ்ரிக் பையால் மூடப்பட்ட நிலையில் காணப்பட்டன என்றும் மலேசியப் பொலிஸார் தெரிவித்தனர். இந்தக் கொலைச் சம்பவத்தில் தொடர்புடைய சந்தேகநபர்களான இலங்கையர்கள் இருவரைத் தேடும் நடவடிக்கை தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. சந்தேகநபர்கள் அந்த வீட்டில் இரண்டு நாள்கள் தங்கியிருந்துள்ளனர் என்றும் சந்தேகநபர்களுடன் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக இந்தக் கொலை இடம்பெற்றிருக்கலாம் என முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பெற்றோல், டீசல் விலை மீண்டும் உயர்வடையும்?

**கொழும்பு, செப். 25**
**இலங்கையில் பெற்றோல் மற்றும் டீசல் விலைகள் உயர்வடைவதற்குச் சந்தர்ப்பங்கள் உள்ளதாக துறைசார் நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.**

உக்ரைன் மீதான ரஷ்யாவின் போர் காரணமாக அமெரிக்காவும், மேற்கத்தேய நாடுகளும், நேட்டோக் கூட்டணியும் ரஷ்யா மீது ஏகப்பட்ட பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளன. இதனால் ரஷ்யாவில் பணவீக்கம் தற்போது உயர்ந்துள்ளது. இந்தப் பணவீக்கத்தின் விளைவாக எரிபொருளை உற்பத்தி செய்யும் ரஷ்யாவிலேயே எரிபொருள்களின் விலை அதிகரித்துள்ளது. இந்த விலையேற்றத்தைக் கட்டுப்படுத்துவதற்காக எரிபொருள்களுக்கான ஏற்றுமதியைத் தடைசெய்துள்ளது ரஷ்யா.
இதனால் இரண்டே நாள்களில் எரிபொருள்களில் 4 வீத விலைக்குறைப்பு ரஷ்யாவில் ஏற்பட்டுள்ளது. ஆனால், ரஷ்யாவின் முடிவால், சர்வதேச சந்தையில் தினமும் சுமார் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் பரல் எரிபொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.
இதனால் சர்வதேசத்திலும், ரஷ்ய எரிபொருளை தனது ஆதாரமாகக் கொண்டிருக்கும் இலங்கையிலும் எரிபொருள்களின் விலை அதிகரிக்கப்படலாம் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது. (ம)

## ஜேர்மனிக்கு அடுத்தவாரம் செல்கிறார் ஜனாதிபதி

கொழும்பு, செப். 25
ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அடுத்த வாரம் ஜேர்மனிக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார்.
'பெர்லின் க்ளோபல் டயலொக்' மாநாட்டில் கலந்துகொள்வதற்காகவே அவர் ஜேர்மனிக்குச் செல்கின்றார். அங்கு செப்ரெம்பர் 28 மற்றும் 29ஆம் திகதிகளில் இந்த மாநாடு நடைபெறுகின்றது.
இந்தப் பயணத்தின்போது ஜேர்மன் சான்சிலர், அரசியல் தலைவர்கள் மற்றும் வர்த்தக பிரமுகர்களுடனும் ஜனாதிபதி சந்திப்புகளை நடத்தவுள்ளார். (ம-44)

## நாடு திரும்பினார் ரணில்
# அமைச்சரவை இன்று கூடும்!

கொழும்பு, செப். 25
ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கியூபா மற்றும் அமெரிக்கப் பயணத்தை முடித்துக் கொண்டு நேற்றுக் காலை நாடு திரும்பினார். ஜனாதிபதி தலைமையில் இன்று அமைச்சரவைக் கூட்டம் நடைபெறவுள்ளது. அத்துடன், ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களையும் ஜனாதிபதி சந்திக்கவுள்ளார்.
கியூபாவின் ஹவானாவில் கடந்த 15ஆம் திகதி முதல் 16ஆம் திகதி வரை நடைபெற்ற ஜி-77 நாடுகளின் தலைவர் உச்சி மாநாட்டில் ஜனாதிபதி முதலில் பங்கேற்றார்.
அதன்பிறகு, அமெரிக்காவில் கடந்த 19ஆம் திகதி முதல் 21ஆம் திகதி வரை நடைபெற்ற ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் 78ஆவது ஆண்டு அமர்வின் அரச தலைவர்கள் மாநாட்டில் பங்கேற்றார். இருதரப்பு சந்திப்புகளையும் அவர் நடத்தியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-44)



## திலீபனின் நினைவூர்திக்கு வடமராட்சியில் அஞ்சலி

யாழ்ப்பாணம், செப். 25
வடமராட்சி கிழக்கு, கேவில் பகுதியிலிருந்து நேற்றுமுன்தினம் ஆரம்பித்த தியாக தீபம் திலீபனின் ஊர்திக்கு வடமராட்சி மக்கள் அஞ்சலி செலுத்தினர்.
இந்த ஊர்தி மாலை 6.30 மணிக்கு நெல்லியடியை வந்தடைந்து தொடர்ந்து பருத்தித்துறையூடாக இன்பருட்டியைச் சென்றடைந்தது. நெல்லியடி, பருத்தித்திறையில் மக்கள் மலரஞ்சலி செலுத்தியதைத் தொடர்ந்து இன்பருட்டி அமைக்கப்பட்ட பந்தலில் மக்கள் திரண்டு அஞ்சலி செலுத்தினர்.
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரின் ஏற்பாட்டில் இந்த நினைவூர்திப்பவனி இடம்பெற்றது. (ச-27)

# அவுஸ்திரேலியாவில் திலீபனுக்கு அஞ்சலி

கொழும்பு, செப். 25
தியாக தீபம் திலீபனின் 36ஆவது நினைவேந்தல் நிகழ்வு தாயகத்திலும், புலத்திலும் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டுவரும் நிலையில், அவுஸ்திரேலியாவிலும் நினைவேந்தல் நிகழ்வுகள் நேற்று முன்னெடுக்கப்பட்டன.
அவுஸ்திரேலியாவில் வாழும் தமிழர்கள் மற்றும் தமிழ் அமைப்பினர் இணைந்தே இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளனர்.
இதன்படி அவுஸ்திரேலியாவின் நான்கு நகரங்களில் நினைவேந்தல் நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. மெல்போர்னில் நேற்று விக்ரோறியா தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் மாலை 6 மணிமுதல் 8 மணிவரை நினைவேந்தல் 'கற்பகதரு' மண்டபத்தில் நடைபெற்றது.
பிரிஸ்பெய்னில் குயின்ஸ்லாந்து தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் நாளை இரவு 7 மணிக்கு நினைவேந்தல் நிகழ்வு ஆரம்பமாகவுள்ளது.
சிட்னி தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் சிட்னியிலும் நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. நாளை முற்பகல் 10 மணி முதல் மாலை 6 மணிவரை இளையோர் பங்குகொள்ளும் அடையாள உண்ணாவிரதமும் இடம்பெறவுள்ளது.
செப்ரெம்பர் 30ஆம் திகதி பேர்த்திலும் நினைவேந்தல் நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. (ம-44)




**பே**ருக்கும் புகழுக்கும் எல்லாருக்கும் ஆசை இருக்கும்தான். அதுக்காக அடுத்தவன் ஒரு நல்ல வேலையைச் செய்யக்கூடாது எண்டு அதைக் குழப்பிறமாதிரி நடக்கிறது எங்கட ஆக்களுக்கு கைவந்த கலை. கானமயிலாட முதலே வான்கோழி தன்ர டான்ஸைக் காட்டி எல்லாரையும் ஓட வைச்சிட்டு 'பாத்தியோ, உன்ர டான்ஸை அவையைப் பாக்கவிடாமல் செய்திட்டன்' எண்டு கழுத்தைச் சிலுப்புமாம். அதைமாதிரி திலீபன்ர நினைவேந்தல்லையும் ஒரு கட்சி செய்யிற கூத்துகள் இருக்கு.

திலீபன்ர வாழ்க்கையையும், நினைவுகளையும் எங்கட அடுத்த சந்ததிக்கு கொண்டுபோய்ச் சேர்க்க வேணும் எண்டால், 'திலீபன் எண்டால் ஆர்? அவரின்ர தியாகம் எப்பிடிப்பட்டது? எப்பிடியான சூழலில அவர் உண்ணாவிரதம் இருந்தார்?' எண்ட விவரங்களைச் சரியாவும் ஆதாரத்தோடையும் சொல்லோணும். திலீபன்ர சின்னவயதுப் போட்டோவில இருந்து அவர் கடைசியா பொக்கெற்றில குத்தியிருந்த பேனையின்ர மொடல் வரைக்கும் எல்லாத்தையும் கனகாலமாத் தேடி எடுத்து, பேப்பர்களில வந்த செய்திகளையும் சேகரிச்சு ஒரு ஆவணக் காப்பகம் மாதிரி ஒரு கண்காட்சியை நல்லூரில திறந்திருக்கினம். இந்தக் கண்காட்சியில வைச்சிருக்கிற பொருள்கள், பேப்பர் கட்டிங்குகள் எல்லாத்தையும் சேகரிச்சது மாநகரசபையின்ர முன்னாள் உறுப்பினர் பார்த்திபன்தான். இப்பிடி ஒரு பெறுமதியான வேலையை ஆரும் செய்தால், திலீபன்ல உண்மையான மதிப்பு வைச்சிருக்கிறவை அந்தக் கண்காட்சியை இன்னும் திறமாச் செய்ய ஒத்துழைப்புக் குடுத்திருக்கவேணும்.

ஆனால், திலீபன்ர நினைவூர்தியையும், நினைவேந்தலையும் குத்தகைக்கு எடுத்திருக்கிற மாதிரி நடந்துகொள்ளுற சைக்கிள் கட்சிக்காரருக்கு இந்தக் கண்காட்சியை வைச்சு, மணிவண்ணன் தரப்பில இருக்கிற பார்த்திபன் நல்லபேர் வாங்கிறது விருப்பம் இல்லை. அதால கண்காட்சி நடக்கப் போகுது எண்டவுடனேயே, திலீபன் நினைவுத் தூபிக்கு முன்னால இருக்கிற காணியை, கண்காட்சிக்கு குடுக்கவேண்டாமெண்டு மாநகரசபைக்கு அழுத்தம் குடுக்க, சாடைமாடையா விசாரிச்சிருக்கினம். ஆனால் சைக்கிள்காரர் இப்பிடிச் செய்வினம் எண்டு முதலே தெரிஞ்சதால, போன வருசமே கண்காட்சி நடக்கிற காணியை பார்த்திபன் 'புக்' பண்ணிப்போட்டார். அதால காணியைத் தடுக்க முடியேலை. அதுக்குப் பிறகு சைக்கிள்காரர் செய்தவேலை தான் வேறலெவல். இரவோட இரவா இன்ரர்நெற் எல்லாம் தேடி, அதுகளில திலீபனைப் பற்றி இருந்த விசயங்களை 'டவுன்லோட்' பண்ணி, 'பனர்' அடிச்சு, அதை கண்காட்சி நடக்கிற காணியைச் சுத்திக் கட்டிட்டினமாம். இப்பிடி திலீபன்ர வரலாற்றை பனர் அடிச்சுக் கட்டினால், சனங்கள் இந்த 'பனரை' பார்த்திட்டு, கண்காட்சியைப் பாக்காமல் திரும்பிப் போடுவினம் எண்டு நினைச்சிருக்கினம். தங்கட அரசியலுக்காக கடைசியில திலீபன்ர தியாகத்தைக் கூட அடைவு வைச்சவைய என்னெண்டு சொல்றது? சோத்துக்க பூசணிக் காயை ஒளிச்சுவைக்கலாம், பூகம்பத்தை ஒளிச்சு வைக்க ஏலுமோ? சனங்கள் திரண்டுவந்து, அந்த 'பனரை' பாக்கிறதை விட கண்காட்சிக்குப் போய், திலீபன்ர நினைவில கொஞ்ச நேரம் வாழ்ந்திட்டுப் போகுதுகள்.



- பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வீடு வாடகைக்கு

குமாரபுரம் பரந்தன் கிளிநொச்சியில் (பரந்தன் சந்தியிலிருந்து 400 m) வாகன தரிப்பிடம் 3 room 3 hall சகல வசதிகளுடன் அமைந்த வீடு வாடகைக்கு உண்டு

077 8772157




அமெரிக்காவின் கழுகுப்பார்வையின் மத்தியிலும்

# இலங்கைக்கு வருகின்றார் ஈரான் அதிபர் இப்ராஹிம்!

அமெரிக்காவை வெறுப்பேன் என்றவர்
உச்சமாகின்றதா பிராந்தியப் பதற்றம்?

**கொழும்பு, செப். 25**

**உமா ஓயா பல்துறை திட்டத்தை திறந்து வைப்பதற்காக ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசிக் இலங்கைக்கு எதிர்வரும் டிசெம்பரில் வருகை தரவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.**

ஈரான் அரசின் உதவித் திட்டத்தின் கீழ் உமா ஓயா பல்நோக்கு அபிவிருத்தி திட்டம் பதுளை மாவட்டத்தில் முன்னெடுக்கப் பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின் பிரகாரம் தல்கொல்ல ஓயாவின் குறுக்கே ஒரு அணை கட்டப்படுவதுடன், சுரங்கப்பாதை ஊடாக மின்திட்டத்துக்கு நீர் அனுப்பப்படும்.

அத்துடன் உமா ஓயாவின் துணை நதிகளான மாத்தட்டிலா ஓயாவுக்கு குறுக்கே மற்றொரு அணை கட்டப்பட்டு சுரங்கப் பாதை வழியாக உமா ஓயா மின் நிலையத்துக்கு நீர் கொண்டு செல்லப்படும். 2008ஆம் ஆண்டு இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட நிலையில் இதற்கு மொத்த திட்டச் செலவாக சுமார் 529 மில்லியன் டொலர் செலவிடப்பட்டுள்ளது. இதில் 85 வீதம் ஈரான் அரசாங்கத்தால் வழங்கப் பட்டது.

உமா ஓயா நீர் மின் நிலையத்தின் அலகு ஒன்றின் மின் உற்பத்தி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதுடன் அலகு இரண்டு மின் உற்பத்தி எதிர்வரும் டிசெம்பரில் ஆரம்பிக்கப்படவுள்ளது. இந்தத் திட்டத்தை திறந்து வைக்கும் வகையிலேயே ஈரான் ஜனாதிபதி இலங்கைக்கு வருகை தரவுள்ளார்.

நியூயோர்க்கில் இடம்பெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்சபை அமர்வில் பங்கேற்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஈரான் ஜனாதிபதிக்கு இதற்கான உத்தியோகபூர்வ அழைப்பை விடுத்திருந்தார்.

அமெரிக்காவின் பரமவைரியாக ஈரான் இருக்கும் நிலையில், அமெரிக்காவுக்கு எதிராக கடும் போர்க்குற்றச்சாட்டுகளை இப்ராஹிம் ரைசிக் முன்வைத்துவரும் நிலையில் அவரின் இலங்கைக்கான வருகை இலங்கை - அமெரிக்கா இடையிலான உறவில் விரிசலை ஏற்படுத்தலாம் என்றும் கருதப்படுகின்றது.

இதேவேளை- இலங்கை எவருடைய நலன் சார்ந்து செயற்படும் நாடு அல்ல. இலங்கையின் நலனை முன்னிலைப் படுத்திச் செயற்படும் நாடு என்று ஐக்கிய நாடுகள் சபையின் 78ஆவது அமர்வில் ரணில் தெரிவித்தார் என் பது குறிப் பிடத்தக்கது. (ச-இ)

## மரண அறிவித்தல்



### சதாசிவம் தவச்செல்வம்

( உரிமையாளர் செல்வம் கூல்பார், சாவகச்சேரி )

தோற்றம்
24. 02. 1954

மறைவு
24. 09. 2023

பெருங்குளம் சந்தியை பிறப்பிடமாகவும் நுணாவில் சந்தியை வசிப்பிடமாகவும் கொண்ட சதாசிவம் தவச்செல்வம் அவர்கள் நேற்று (24.09.2023) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சதாசிவம் மாணிக்கம் தம்பதிகளின் புதல்வனும் காலஞ்சென்ற முத்துக்குமாரு அன்னம்மா தம்பதிகளின் மருமகனும் பரமேஸ்வரியின் பாசமிகு கணவரும் சத்துருசங்காரம் காலஞ்சென்ற இந்திராணி ஆகியோரின் அன்புச் சகோதரரும் தனுக்ஷன், தஜிகா, தயானா, தக்ஷனா, தவஜிகா ஆகியோரின் அன்புத் தந்தையும் சுஜீவனின் மாமனாரும் அபிசனன், பவிக்ஷா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.09.2023) திங்கட்கிழமை இடம்பெற்று பிற்பகல் 03.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக குச்சப்பிட்டி, நுணாவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

(சு.26371) (M.1)

## மரண அறிவித்தல்



### திருமதி. ஜொய்ஸ் பத்மினி வேதநாயகம் சில்வா

பலாலி வீதி உரும்பிராய் தெற்கை பிறப்பிடமாகவும். இல.160(80) கண்டி வீதி சுண்டிக்குளியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி. ஜொய்ஸ் பத்மினி வேதநாயகம் சில்வா (பபா அக்கா) அவர்கள் 23.09.2023 அன்று கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பு டேவிட் ஜெயரட்ணம் சுகந்தராணி ஆகியோரின் சிரேஷ்ட புதல்வியும், காலஞ்சென்றவர்களான சேரிஸ் டீ சில்வா. மேரி ஆகியோரின் அன்பு மருமகளும், திரு. வேதநாயகம் சில்வா ( ஓய்வுபெற்ற மேலதிக பிரதி விவசாய பணிப்பாளர், வடக்கு கிழக்கு மாகாணம்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற ஜெயானந்தன், ஜெயராஜினி, வண. ஜெயச்சந்திரன், ஜெயரூபி, ஜெயந்தராஜ் ஆகியோரின் அன்பு சகோதரியும், டானியல் விமல்ராஜ் (நோர்வே), துசீதரன் (அதிபர்- சென் ஜோண்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம்) மற்றும் ரூத் அனித்தா (ஆசிரியை- உரும்பிராய் தூய இம்மானுவேல் ஆலய முன்பள்ளி) ஆகியோரின் அன்புத்தாயாரும், ஆன் கத்ரின் (நோர்வே),துஷ்யந்தி (அதிபர்- சுண்டிக்குளி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்), சசிஆனந் (நிர்வாக உத்தியோகர் - Sierra Telecom Division- Jaffna) ஆகியோரின் அன்பு மாமியாரும் எலிசபெத், ஷேரன் திவ்யா, எலியாஸ், அந்திரேயாஸ், தபித்தா ஷானியா, ஒசேயா ருத்ஷான் ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை 27.09.2023 புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு இல.160(80), கண்டி வீதி, சுண்டிக்குளியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று. இராசவீதி. கோப்பாயில் அமைந்துள்ள பரி. இம்மானுவேல் ஆலய சேமக்காலையில் சரீரம் நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
V.S.B. துசீதரன் (மகன்)
0777 283616

(CS 26374) (M-1)

# சமூக வலைத்தளங்களை கண்காணிப்பதற்குச் சட்டம்

கொழும்பு, செப். 25

சமூக வலைத்தளங்களைக் கண்காணிப்பதற்கான சட்டமொன்று சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இது தொடர்பாக ஜனாதிபதி தனது அமெரிக்கப் பயணத்தின்போது மெட்டா (பேஸ்புக்) நிறுவனத்தின் பிரதானியைச் சந்தித்து அறிவுறுத்தியுள்ளமை வரவேற்புக்குரியது என ஐக்கிய சமூக சங்கத்தின் தலைவர் புலஸ்தி வன்னியராச்சி தெரிவித்துள்ளார்.

நாளாந்தம் 14 ஆயிரத்துக்கும் அதிகமான இணையக் குற்றங்கள் நடக்கின்றன.

9 ஆயிரம் முறைப்பாடுகள் பொலிஸ் நிலையங்களில் பதிவாகின்றன. அதனால் சமூக வலைத்தளங்களைக் கண்காணிப்பது தொடர்பான சட்டம் மிகவும் அவசியமானது என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-இ)

இந்தியா– இலங்கை இடையே

# 'எட்கா' ஒப்பந்தங்களை நடைமுறைப்படுத்த பேச்சு

கொழும்பு, செப். 25

இந்தியா மற்றும் இலங்கை இடையே பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு ஒப்பந்தமான 'எட்கா' ஒப்பந்தத்தை மீண்டும் தொடங்குவது தொடர்பான பேச்சுகள் இடம்பெற்றுள்ளன என்று ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் ஜனாதிபதி ஊடகப்பிரிவு வெளியிட்ட அறிக்கையில்,

'எட்கா' உடன்படிக்கை தொடர்பில் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் இதுவரை 11 சுற்றுப் பேச்சுகள் நடைபெற்றுள்ளன. அதன் தொடர்ச்சியாக 'எட்கா' ஒப்பந்தம் தொடர்பான விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடல்களை முன்னெடுப்பதற்கு இலங்கை- இந்தியா பிரதான அதிகாரிகள் கடந்த 19ஆம் திகதி மெய்நிகர் சந்திப்பொன்றை நடத்தினர்- என்றுள்ளது.

இந்த ஒப்பந்தத்தினூடாக இந்திய முதலீட்டா ளர்கள் உள்ளீர்க்கப்பட்டால் பல இலங்கையர் தொழில்வாய்ப்பை இழக்க நேரிடுவதுடன் ஊதியத்தில் வீழ்ச்சியும் ஏற்படும் என முன் பதாகப் பல்வேறு தரப்பினரால் எதிர்ப்பு வெளியிடப்பட்டிருந்தது.

தற்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இந்தியப் பயணத்தின் பின்னர் இந்தியாவுடனான புதிய உடன்படிக்கைகளை கைச்சாத்திடுவதில் அரசாங்கம் தீவிரம் காட்டி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளொரு நல்வார்த்தை

இறந்த காலத்துக்கும் வருங்காலத்துக்கும் இடையே மரணத்துக்கான போராட்டம்தான் புரட்சி.

- பிடல் காஸ்ட்ரோ -


# வல்லரசுகள் விடுக்கும் வரலாற்றுத் தவறுகள்!

உலக வல்லரசுகளுக்கு இடையிலான மோதல்கள் மற்றும் பதற்றங்கள் என்பன இலங்கை போன்ற சிறிய தீவு நாடுகளுக்கும், கடன் நெருக்கடிக்குள்ளாகியுள்ள நாடுகளுக்கும் பொருளாதாரப் பலத்தை மீண்டும் அடைந்து கொள்வதற்குத் தடையாக அமைகின்றன என்று ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் 78 ஆவது அமர்வில் விமர்சித்திருக்கின்றார் ஜனாதிபதி ரணில்.

உலகளாவிய போர்ப்பதற்றம், காலநிலை தொடர்பில் வல்லரசுகள் கொண்டிருக்கும் அசமந்தப்போக்கு மற்றும் பொருளாதாரச் சமநிலையற்ற வளப்பகிர்வு என்பன தீவு நாடுகளின் ஆயுளையும், வறிய நாடுகளின் பொருளாதாரக் கட்டமைப்பையும் 'முற்றாகத் தீர்மானித்துக் கொண்டிருக்கும்' நிலையில், ஜனாதிபதி ரணிலின் இந்த உரை பல நாடுகளால், அதிலும் குறிப்பாக துவாலு, மாலைதீவு போன்ற தீவு நாடுகளால் மெச்சப்படுகின்றது – பாராட்டப்படுகின்றது. தீவு நாடுகளின் இருப்பை உறுதிசெய்வதற்கான கோரிக்கையை மன்றாட்டமாக முன்வைக்காமல், உலக வல்லரசுகளுக்கு எதிராக நின்று அவற்றை நோக்கியே நேர்பட விரல்நீட்டியிருக்கும் 'கெத்துக்காக' ரணிலை எத்தனை பாராட்டினாலும் அது தகும். அதே நேரம் ரணிலின் அரசியல் முதிர்ச்சி – சர்வதேசப் பிணைப்பு – அவருக்கு இருக்கக்கூடிய சர்வதேச அங்கீகாரம் போன்ற அம்சங்களையும் ஐ.நா. உரை கட்டியம் செய்கின்றது என்பதையும் மாற்றுக் கருத்தின்றி ஏற்கத்தான் வேண்டும். ஆனால், ஒரு தீவு நாட்டின் ஜனாதிபதியாக – அழிவின் ஆபத்தம்சங்களை எதிர்கொண்டிருக்கும் தேசத்தின் பிரதிநிதியாக ரணிலின் கோரிக்கையை, தார்மீக கோபத்தை, ஒருவிதமான சலிப்பு மனநிலையை எவ்வளவுதூரம் சர்வதேசம் கண்டுகொள்ளப்போகின்றது என்ற கேள்வியும் இங்கே எழுவது தவிர்க்க முடியாததாகின்றது. ஏனெனில் அதிவேகத்தில் மாறிவரும் பருவநிலை மாற்றத்துக்கு எதிராக உலகத் தலைவர்கள் அபாயக்குரலெழுப்புவது இதுவொன்றும் முதல்முறையல்ல. கிளாஸ்கோவில் பருவநிலை மாற்றம் தொடர்பான சர்வதேச மாநாடு இடம்பெற்றபோது துவாலு நாட்டின் அமைச்சரொருவர் கடலுக்குள் இறங்கி நின்றபடி உரையாற்றினார். கிரைட்டா தன்பேர்க் என்ற சிறுமி பருவநிலை மாற்றத்துக்காக நடத்தாத போராட்டங்களே இல்லை என்னும் அளவுக்கு இந்த விடயப் பரப்பில் அதிதீவிரமாக இயங்கி வருகின்றார். ஆனால், இவர்களின் கோரிக்கைகள் – வலியுறுத்தல்கள் எதுவும் வல்லரசுகளின் காதுகளில் விழவில்லை – அவற்றின் இரும்பு இதயங்களை இளகச் செய்யவில்லை என்பது தான் கசப்பான மெய்.

பூமி வெப்பமடைந்ததால் பருவநிலையில் முன்பின் முரணான மாறுபாடுகள் வலுவாக ஏற்பட்டிருக்கின்றன. 'எல் நினோ' பேரிடர் அறிவிப்பு இந்தமுறை 'உலகளாவிய ரீதியில் விடுக்கப்பட்டிருக்கின்றது. இந்த அறிவிப்பின் தொடர்ச்சியாக இலங்கையும், மேற்கத்தேய நாடுகள் பலவும் வரலாறு காணாத வெப்பத்துக்குள் இந்தமுறை ஆட்பட்டிருக்கின்றன. எல்லாவற்றையும் விட மேலாக, பருவநிலைக் குழப்பத்தால் வலசைப் பறவைகள் தங்களின் எல்லையற்ற பறப்பு முயற்சிகளை மேற்கொள்ளமுடியாமல் தவிப்பதாக ஐரோப்பியப் பல்கலைக்கழகங்கள் எண்பித்துள்ளன, எவ்வளவு பாரதூரமான இயற்கை மீறல் இது.

கார்பன் வெளியேற்றத்தாலும், பூமியை அதன் இயல்பு நிலையில் இருந்து கொஞ்சம்கொஞ்சமாக மாற்றுவிக்கும் சமூகவிரோதச் செயற்பாடுகளாலும் மனிதகுலம் தன் இருப்பையே தொலைத்து வருகின்றது. ரணிலுடைய குரலுக்கோ அல்லது இதர தீவு நாடுகளின் குரலுக்கோ கார்பனை அளவுகடந்து வெளியேற்றும் வல்லரசுகள் செவிசாய்க்கும் என்ற நம்பிக்கை தீவு தேசங்களிடம் கொஞ்சமும் இல்லை. அந்தக் குணாம்சம் வல்லரசுகளிடம் இருந்திருந்தால் பூமியின் வெப்பநிலையை 2 செல்சியஸால் குறைப்பது என்று 130 உலகத்தலைவர்களுடன் பரிஸில் எட்டப்பட்ட சர்வதேச உடன்பாடு நீர்த்துப்போகச் செய்யப்பட்டிருக்கின்றதே. அது ஏன்?




# சுகாதார அமைச்சில் குளறுபடி ஆராய இரண்டு உபகுழுக்கள்!

## நியமித்தது 'கோபா' குழு

**கொழும்பு, செப். 25**

**சுகாதார அமைச்சின் மருந்துக் கொள்வனவு, மருந்துத் தட்டுப்பாடு ஆகியவை தொடர்பில் ஆராய்ந்து பரிந்துரைகளை வழங்குவதற்காக, அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவான 'கோபா' குழு இரண்டு உப குழுக்களை நியமித்துள்ளது.**


குழுவின் தலைவர் இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன தலைமையில் நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் 'கோபா' குழு கூடிய போதே இந்த உபகுழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

முதலாவது உபகுழுவின் தலைவராக நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க, உபகுழுவின் ஏனைய உறுப்பினர்களாக நாடாளுமன்ற உறுப்பினர்களான டயானா கமகே, அசோக் அபேசிங்க, ஜயந்த கெட்டகொட மற்றும் ஹரினி அமரசூரிய ஆகியோர் நியமிக்கப்பட்டனர்.

அதேவேளை, நாடாளுமன்ற உறுப்பினர் பிரதீப் உதுகொட தலைமையில் இரண்டாவது உபகுழு நியமிக்கப்பட்டது.

இதன் ஏனைய உறுப்பினர்களாக நாடாளுமன்ற உறுப்பினர்களான இசுரு தொடங்கொட, விமலவீர திஸாநாயக்க, மஞ்சுள திஸாநாயக்க, வீரசுமன வீரசிங்க மற்றும் முதிதா பிரஷாந்தி ஆகியோர் நியமிக்கப்பட்டனர்.

சுகாதார அமைச்சின் மனித வள முகாமைத்துவம், சுகாதார அமைச்சின் கீழுள்ள மருத்துவமனைகள், நிறுவனங்களின் முகாமைத்துவம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் தொடர்பான அமைப்புகளில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் உள்ளிட்ட விடயங்களையும் இந்த உப குழுக்கள் ஆராயவுள்ளன. (ச-இ)



# கண் வில்லை கொள்வனவு: அரசாங்கம் அவசர முயற்சி

## தொழிற்சங்கக் கூட்டமைப்பு குற்றச்சாட்டு

கொழும்பு, செப். 25

சுகாதார அமைச்சு கண் வில்லைகளை அவசரமாகக் கொள்வனவு செய்வதற்கு முயற்சிக்கின்றது என்று சுகாதார மற்றும் சிவில் உரிமைகளுக்கான மருத்துவர்களின் தொழிற்சங்கக் கூட்டமைப்பு குற்றஞ்சாட்டியுள்ளது.

கொழும்பில் நேற்றுமுன்தினம் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த அந்தச் சங்கத்தின் செயலாளர் மருத்துவ நிபுணர் சமல் சஞ்சீவ இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது:-

கண்வில்லைக் கொள்வனவு தொடர்பில் சுகாதார அமைச்சு உடனடியாகக் கவனம் செலுத்த வேண்டும். சுகாதார அமைச்சு மீண்டும் அவசரமாகக் கண்வில்லைகளைக் கொள்வனவு செய்வதற்கு முயற்சிக்கின்றது என்று தகவல் வெளியாகியுள்ளது. விலை மனுத் தாக்கல் செய்துள்ள நிறுவனங்களுக்கு இந்தப் பணிகளைப் பகிர்ந்தளிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. சத்திரசிகிச்சைகளுக்கான உபகரணங்கள், மயக்க மருந்து மற்றும் இரசாயன ஆய்வுகூடத்துக்கான உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கு இவ்வாறான முறைமை ஒன்று இல்லை - என்றார். (எ-இ)

நாளை

26.09.2023
செவ்வாய்க்கிழமை
புரட்டாதி 09

சுபநேரம் : 10.32 - 12.02
ராகுகாலம் : 03.02 - 04.32

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனவாத மோதல்களுக்கு ஒருசில குழுக்கள் தூபம்

## சமன் ரத்னப்பிரிய தெரிவிப்பு

**கொழும்பு, செப். 25**

**நாட்டுக்குள் இனவாத மோதல்களை ஏற்படுத்தி தங்களது அரசியல் நோக்கங்களை ஈடேற்றிக் கொள்ள சில அரசியல் குழுக்கள் முயற்சித்து வருகின்றன என்று ஜனாதிபதியின் தொழிற்சங்கத் தொடர்பாடல் பணிப்பாளர் நாயகம் சமன் ரத்னப்பிரிய தெரிவித்தார்.**

நாட்டின் தற்போதைய நிலைமையை வெளிப்படுத்தும் நோக்கில் சிவில் அமைப்புகள் கொழும்பில் கடந்த வெள்ளிக்கிழமை ஏற்பாடு செய்திருந்த ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சில அரசியல் குழுக்கள் மற்றும் தொழிற்சங்கங்கள் தங்களது அரசியல் நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ளும் நோக்கில் பல்வேறு செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றன. 'சனல் - 4' விவகாரம் தொடர்பில் நாடாளுமன்றத்துக்குள்ளும் சில தலையீடுகள் காணப்படுகின்றன. சில அரசியல் குழுக்கள் பல்வேறுபட்ட நிலைப்பாடுகளை முன்வைக்கின்றன. அது தொடர்பிலான சரியான விசாரணையை நடத்த அரசு முன்வரவில்லை என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. இருப்பினும் அதனை ஏற்றுக்கொள்ளமுடியாது. ஜனாதிபதியின் தலையீட்டின் கீழ் அது குறித்து ஆராய ஓய்வுபெற்ற நீதியரசர்கள் தலைமையிலான குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. குறித்த குழு அது தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்ளும்.

பாதுகாப்பு அமைச்சு அந்தக் குற்றச்சாட்டுகளை நிராகரித்துள்ள போதும் எதிர்க்கட்சி போலிப் பிரசாரங்களை மேற்கொண்டு வருகிறது. உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் நாட்டில் பெரும் அழிவினை ஏற்படுத்தியது. அதனால் அதனை மேற்கொண்டவர்களை கண்டறிய வேண்டியது அவசியம். அதற்காக சர்வதேச ஒத்துழைப்புகளைப் பெற்றுக்கொள்வதும் தவறாகாது. சில குழுக்கள் நாட்டுக்குள் அரசியல் பிரச்சினைகளைத் தோற்றுவிக்க முயற்சிக்கிறார்கள். குருந்தி விகாரை மற்றும் திலீபனின் நினைவுதின அனுஷ்டிப்பு உள்ளிட்ட விடயங்களில் அது தெரியவந்துள்ளது - என்றார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ உள்ளிட்ட பல தரப்பினரும், ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் விசாரணை நடத்தும் ஆணைக்குழு அரசாங்கத்துக்குப் பரிந்துரையை மட்டும் முன்வைப்பதுடன் நின்றுவிடாது நீதிமன்றில் வழக்குத் தொடரும் அதிகாரத்தையும் கொண்டிருக்கவேண்டும் என்றே தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-44)

நாடாளுமன்றக் குழுக்களில் இருந்து

# அலி சப்ரி தகுதி நீக்கம்!



புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீமை, நாடாளுமன்றத்தில் இயங்கும் அனைத்து குழுக்களிலிருந்தும் இடைநிறுத்தும் பிரேரணைக்கு நாடாளுமன்றத்தில் ஒப்புதல் கிடைத்துள்ளது.

நாடாளுமன்றம் கடந்த வெள்ளிக்கிழமை கூடிய போது எதிர்க்கட்சித் தலைவரால் மேற்படி பிரேரணை முன்வைக்கப்பட்டு, அது தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டது.

'சட்டவிரோத சம்பவம் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீமுக்கு எதிராக விசாரணை நடைபெற்று வருகின்றது. எனவே, விசாரணை முடியும் வரை நாடாளுமன்றக் குழுக்களின் பிரதி நிதித்துவத்தை தற்காலிகமாக இடைநிறுத்தும் யோசனையை முன்வைக்கின்றேன்.

3.3 கிலோ தங்கம் மற்றும் 91 ஸ்மார்ட் கையடக்கத் தொலை பேசிகளை அவர் சட்ட விரோதமாக கொண்டு வந்தபோது 75 இலட்சம் ரூபாவே அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. அலி சப்ரி ரஹீமுக்கு ஏன் சட்டம் உரிய முறையில் பிரயோகிக்கப்பட வில்லை? அலி சப்ரி ரஹீம் நாடாளுமன்றத்தின் நெறிமுறைகள் மற்றும் சிறப்புரிமைகள் தொடர்பான குழுவின் விசாரணைக்காக பரிந்துரைக்கப்பட்டுள்ளதாலும், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான நெறிமுறைகள் மற்றும் சிறப்புரிமைகள் தொடர்பாக சிக்கல்கள் உருவாகுவதினாலும் விசாரணை முடியும் வரை அவர் அனைத்து குழுக்களையும் பிரதிநிதித்துவப்படுத்துவதற்குத் தடைசெய்யவேண்டும்' என்று சஜித் தெரிவித்தார். எதிரணியின் பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியல்ல இதனை வழிமொழிந்தார். இதனையடுத்து இந்தப்பிரேரணையை சபை ஏற்கின்றது என சபாநாயகர் அறிவித்தார். (அ-ம-44)

ஜனாதிபதித் தேர்தலில்

# பொதுவேட்பாளருக்கு இடமில்லை

## பஸில் திட்டவட்டம்

கொழும்பு, செப்.25

அடுத்த ஜனாதிபதி தேர்தலின்போது மொட்டுக்கட்சி வேட்பாளர் ஒருவரை களமிறக்க நடவடிக்கை எடுக்கப்படும் என கட்சியின் செயற்பாட்டாளர்களிடம் பஸில் ராஜபக்ச உறுதியளித்துள்ளார் என அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

பொதுஜன பெரமுனக் கட்சியின் ஸ்தாபகரான பஸில் ராஜபக்ச கட்சி தலைமையகத்தில் கடந்தவாரம் முதல் தொடர் சந்திப்புகளை நடத்திவருகின்றார்.

தொகுதி அமைப்பாளர்கள், உள்ளூராட்சி மற்றும் மாகாணசபை முன்னாள் உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் எனப் பலரும் சந்திப்பில் பங்கேற்றிவருகின்றனர்.

சமகால அரசியல் மற்றும் கட்சியின் எதிர்கால நகர்வுகள் தொடர்பில் கட்சி செயற்பாட்டாளர்களின் ஆலோசனைகளும், கருத்துகளும் கோரப்படுவதுடன், எவ்வாறு செயற்படவேண்டும் என இதன்போது ஆலோசனையும் வழங்கப்பட்டு வருகின்றது எனத் தெரியவருகின்றது.

இவ்வாறு நடைபெற்ற சந்திப்பொன்றின்போது, மொட்டுக்கட்சிக்கு ஜனாதிபதி தரப்பில் கவனிப்பு எதுவும் இல்லை, அமைச்சுப் பதவிகூட வழங்குவதில் இழுத்தடிப்பு தொடர்கின்றது என பஸிலிடம் முறையிடப்பட்டுள்ளது. அதேபோல அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு மொட்டுக் கட்சி ஆதரவு வழங்கவுள்ள விவகாரம் தொடர்பிலும் அவர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

அவ்வேளையிலேயே மொட்டுக் கட்சி உறுப்பினர் ஒருவரே வேட்பாளராகக் களமிறக்கப்படுவார் என்ற உத்தரவாதத்தை பஸில் வழங்கியுள்ளார் எனத் தெரியவருகின்றது. (ஏ-44)

# இறக்குமதிக் கட்டுப்பாட்டை நீக்குவதற்கு நடவடிக்கை

கொழும்பு, செப். 25

தற்போது இறக்குமதிக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ள வாகனங்கள் தவிர்ந்த ஏனைய அனைத்துப் பொருள்களுக்கான இறக்குமதிக் கட்டுப்பாடுகளை நீக்க நடவடிக்கை எடுக்கப்படும் என நிதி அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

ஏனைய அனைத்துப் பொருள்களினதும் இறக்குமதிக் கட்டுப்பாடுகளை அடுத்த மாதம் முதல் நீக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் நிதி அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார். (எ-இ)

# ஆசிய நீர்மின் உற்பத்தி வெகுவாகக் குறைவு

கொழும்பு, செப். 25

ஆசியாவின் நீர்மின்னாற்றல் உற்பத்தி இதுவரை இல்லாத அளவுக்குக் குறைந்துள்ளது. சீனாவிலும், இந்தியாவிலும் நீர்மின்னாற்றல் உற்பத்தி வெகுவாகக் குறைந்திருப்பது இதற்கு முக்கியமான காரணமாகும். ஆசியாவின் மொத்த மின்சார உற்பத்தியில் ஏறத்தாழ முக்கால் பகுதி இவ்விரு நாடுகளிலும் உற்பத்தியாகிறது. அதிகரித்துவரும் மின்சாரப் பயன்பாட்டுக்கு இடையே, நீர்மின்னாற்றல் உற்பத்தி குறைவாக இருப்பதால் புதைபடிம எரிபொருள்கள் மீதான சார்பு நிலை அதிகரித்துள்ளது.

ஆசியாவில் நீரைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தின் அளவு, ஜூலை வரையிலான ஏழு மாதங்களில் 17.9 வீதம் குறைந்துள்ளது என்று புள்ளிவிவரங்கள் கூறுகின்றன. (எ-இ)



# 51 சதவீத வாக்குகளைப் பெறவேண்டும் பெரமுன

## பஸிலின் கனவு இது

கொழும்பு, செப். 25

பொதுஜன பெரமுன எதிர்வரும் தேர்தலில் 51 சதவீதத்துக்கும் மேல் வாக்குகளைப் பெற்று வெற்றி பெறுவதற்காக அனைவரும் இணைந்து உழைக்க வேண்டும் என பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

கட்சியின் [illegible] நடவடிக்கைகளின்போது வேறு அரசியல்கட்சிகளை வளர்க்கும் வகையில் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டாம் என பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும் என்றும் பஸில், சிரேஷ்ட தலைவர்களிடம் கேட்டுக்கொண்டுள்ளார். பொதுஜன பெரமுனவின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்சவுடன் பேச்சு நடத்தி கட்சி எடுத்த முடிவுகள் தொடர்பாக தொடர்ந்தும் கலந்துரையாடப்படவுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கட்சியின் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட வேண்டுமாயின் விசேட கலந்துரையாடல் ஒன்றை நடத்தி, அதனை சிரேஷ்ட தலைவர்களுக்கு அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பஸில் ராஜபக்ச தெரிவித்துள்ளார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிளிநொச்சி மாவட்ட பொதுவைத்தியசாலைக்கு தேவையான AIR CONDITIONER கேள்வி கோரல் 2023

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையின் பிராந்திய பெறுகைகள் குழுத்தலைவர் தகுதியான ஆர்வமுள்ளவர்களிடம் கீழ் குறிப்பிடப்படும் பொருட்களுக்கான முத்திரையிடப்பட்ட பெறுகைகளினை கோருகின்றார்.

| தொ. இல | பெறுகை இல | கேள்விகள் | மதிப்பீட்டுப்பெறுமதி | மீளளிப்பு செய்யப்படாத கட்டணம். |
|---|---|---|---|---|
| 01 | NP/DGH/K/PSDG/Air.con/2023 | AIR CONDITIONER 48000BTU-06 | 7.4MN | 2000/- |
| | | AIR CONDITIONER 24000BTU-01 | | |

01. நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் இவ்வைத்தியசாலை அலுவலகத்தில் கிடைக்க பெறும் விண்ணப்ப படிவத்தினை பூர்த்தி செய்து மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்தி பெறுகைப்பத்திரங்களை அலுவலக நாட்களில் 25.09.2023 தொடக்கம் 10.10.2023 வரையான காலப்பகுதியில் 09.00 மணி தொடக்கம் 03.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.
02. கேள்விகள் 11.10.2023 ம் திகதியன்று முற்பகல் 10.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் தலைவர், பிராந்திய பெறுகைக்குழு மாவட்ட பொதுவைத்தியசாலை, A9 வீதி, கிளிநொச்சி எனும் முகவரியில் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ இரு பிரதிகளில் ஒப்படைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் கேள்வி இலக்கத்தினை தபாலுறையின் இடதுமேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். நேரடியாக கீழேயுள்ள முகவரியில் வருகை தர விரும்பும் கேள்வியாளர்களின் பிரதிநிதிகளது சமூகத்தில் முடிவுறுத்தல் காலத்தின் பின் வைத்தியசாலை மாநாட்டு மண்டபத்தில் உடனடியாக கேள்விகள் திறக்கப்படும்.
03. நாட்டமுள்ள கேள்விதாரர்கள் மேலதிக விபரங்களினையும், நடைமுறைகள் தொடர்பான படிவத்தினை யும், விலைக்கேள்வி பத்திரங்களையும் அலுவலக நேரங்களில் மாவட்ட பொதுவைத்தியசாலை கிளிநொச்சி (தொலைபேசி இல. 021 228 5329 / 021 228 4111) என்ற முகவரியில் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.
04. கேள்வி முன் ஆயத்தக் கலந்துரையாடல் 02.10.2023 அன்று 10.00 மு.ப மாவட்டப்பொது வைத்திய சாலை கிளிநொச்சி மகாநாட்டு மண்டபத்தில் [illegible]ம்பெறும்.
05. கிடைக்கப்பெற்ற விலைக்கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது ஏற்றுக்கொள்வதற்கு இப் பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலைக்கேள்வியாளருக்கான பொறுப்புக்கள் எதிலும் இருந்து விடுபட்டு முழுமையாக இரத்து செய்வதற்கு பெறுகைகள் குழுவின் தலைவருக்கு அதிகாரமுள்ளது.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைகள் குழு,**
**மாவட்ட பொது வைத்தியசாலை, கிளிநொச்சி.**

(cr.40613) (N.1)

## யாழ்நகரில் காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கச்சேரிக்கு அருகாமையில் 31/2 பரப்புக் காணி இரண்டு வெட்டு கிணறுகளுடன் முழுமையாக உடன் விற்பனைக் குண்டு. இந்தக் காணி சுண்டுக்குளி தாபல்நிலையத்திற்கு அருகாமை யில் கச்சேரி நல்லூர் வீதியில் உள்ளது. எதிர்பாக்கப்படும் விலை 55 மில்லியனுக்கு மேலாக எதிர்பார்க்கப்படுகிறது.

தொடர்புகளுக்கு:
- Whatsapp : +447963743585
- மின்னஞ்சல் : jamesraj_uk@yahoo.co.uk-
- Local Contact : 021 222 7141 (Srilanka)

(cs.52141) (N.1)

## கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 29.08.1945 மறைவு 23.09.2023

எமது பாடசாலை ஆசிரியை
திருமதி ஷர்மிளா கணேசராசா
அவர்களின் அன்புத் தாயார்
**காசிலிங்கம் கண்மணி**
அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி ! சாந்தி ! சாந்தி ! ! ! !

ஆசிரியர் நலன்புரிக்கழகம்
யா/ யாழ். இந்து ஆரம்பபாடசாலை

(cs.52249) (N.1)

## கண்ணீர் அஞ்சலி

மன்றத்தின் நீண்டகால உறுப்பினர்
**சதாசிவம் தவச்செல்வம்**
( உரிமையாளர் - செல்வம் கூல் பார் - சாவகச்சேரி)
அவர்கள் 24.09.2023 நேற்று இறைவனடி சேர்ந்தார்.
அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு மன்றம் தனது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கிறது.

சாவகச்சேரி கைத்தொழில்
வணிகர் மன்றம்

(cs.52249) (N.1)

## துயர் பகிர்கின்றோம்

எமது கல்லூரி உடற்கல்வி ஆசிரியரான
**திரு. S. உதயனன்** அவர்களின் **மாமனார்**
கடந்த 03.08.2023 அன்று இறைபதமடைந்தார்
அன்னாரது ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கின்றோம்.

**யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி**
**ஆசிரிய வட்டம்.**

(cs.52213) (N.1)

## மரண அறிவித்தல்

தோற்றம் 27 • 07 • 1941



மறைவு 22 • 09 • 2023

## முத்தையா இராஜேஸ்வரி

கொழும்பைப் பிறப்பிடமாகவும் விதானையார் வீதி, ஈச்சமோட்டை, இல.6, 2ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட முத்தையா இராஜேஸ்வரி கடந்த (22.09.2023) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் சிவபாக்கியம் தம்பதியின் அன்பு மகளும், காலஞ்சென்ற பொன்னம்பலம் முத்தையா அவர்களின் அன்பு மனைவியும், சண்முகலிங்கம், புவனேஸ்வரி, கமலேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், மேகலாகாந்தி (சுவிஸ்), பிரேமளா (கனடா), பிறேமானந்தன் (சுவிஸ்), மனோகரன் (பொறியியலாளர்), கோமளா (சுவிஸ்), திருக்குமரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சந்திரபாலா (சுவிஸ்), சிறிகாந்தா (கனடா), தர்சினி (சுவிஸ்), மேகலா (சுகாதார திணைக்களம்), சுகந்தன் (சுவிஸ்), புஸ்பகலா (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் சந்தியா, பிரணவன், சயந்தன், றம்மியா, அக்ஷரன், அக்ஷயன், அச்சுதன், அபிநாத், விபிஷன், கவின், தளிர்னா, இனித்தா, அநாமிகன், சானுகா, சஜீஷ் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுக்கிரியைகள் நாளை (26.09.2023) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.30 மணியளவில் துண்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்டும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.6, 2ஆம் குறுக்குத்தெரு,**
**யாழ்ப்பாணம்.**

தகவல்:
மு.மனோகரன் (மகன்)
077 773 9859
ம.மேகலா (மருமகள்)
076 668 8423

(cs. 52247) (N-1)

## மரண அறிவித்தல்

தோற்றம் 11 • 04 • 1944



மறைவு 20 • 09 • 2023

## திருமதி அன்னபாக்கியம் நல்லையா

யாழ். அச்சுவேலி பத்தமேனி காளி கோவிலடியைப் பிறப்பிடமாகவும், கனடா Scarborough ஐ வதிவிடமாகவும் கொண்ட அன்னபாக்கியம் நல்லையா கடந்த (20.09.2023) புதன்கிழமை கனடாவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பெரியதம்பி தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற வர்களான சின்னையா கதிராசி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற நல்லையா அவர்களின் அன்பு மனைவியும், சாந்தகுமாரி (சாந்தா) அவர்களின் அன்புத் தாயாரும், ஸ்ரீரங்கநாதன் (ஸ்ரீ - NSR Logistice) அவர்களின் அன்பு மாமியாரும், சஹானா, பிரவீந் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான தம்பிராசா, மகேந்திரம், தவேந்திரம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ் சென்றவர்களான பாக்கியம், சிவசம்பு, சுந்தரம்பிள்ளை, நாகேந்திரம், சோதிப்பிள்ளை, பொன்னம்பலம், வள்ளியம்மை மற்றும் சரஸ்வதி (இலங்கை), கனகம்மா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (25.09.2023) திங்கட்கிழமை (5.00pm - 9.00pm கனடா நேரம்படி) Ajax Crematorium & Visitation Centre 384 Finley Ave, Ajax, ON L1S 2E3, Canada பார்வைக்கு வைக்கப்பட்டு, நாளை (26.09.2023) செவ்வாய்க்கிழமை இறுதிக்கிரியைகள் இடம்பெற்று (8.00pm -10.00pm கனடா நேரம்படி) Ajax Crematorium & Visitation Centre 384 Finley Ave, Ajax, ON L1S 2E3, Canada வில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்**

(cs. 52248) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி அழைப்பு

மண்மகிழ்
18.04.1955



கண்நெகிழ
05.10.2022

கடந்த 05.10.2022 அன்று
சிவபதம் அடைந்த எங்கள் குடும்பத் தலைவி

### அமரர் சிவச்சந்திரராசா தங்கபூபதி

ஓராண்டு நகர்ந்தாலும்
நம்மை விட்டு அகலாது உங்கள் நினைவு
நினைவுகள் வருகையில்
நிலைகுலைந்து போகின்றோம் அம்மா
உங்களை நினைக்காத நொடிகளில்லை

அன்பினால் பண்பினால் நட்பினால்
ஆளுமையால் எங்கள் அனைவரது
உள்ளங்களில் குடியிருக்கும்
எம் அன்னையை நாம்
என்றென்றும் நினைத்திருப்போம்

அன்னையின் ஆத்மா இறைபாதம் சரணடைய
பிரார்த்திப்போமாக
**ஓம் சாந்தி... ஓம் சாந்தி... ஓம் சாந்தி**

அன்னாரின் முதலாம் ஆண்டு திவசம் இன்று (25.09.2023) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**கைதடி மேற்கு, கைதடி.** N.1 **குடும்பத்தினர்**

## மரண அறிவித்தல்



### திருமதி பத்மாசனிதேவி சீவரத்தினம்

யாழ் இணுவிலை பிறப்பிடமாகவும், கனடாவில் வசித்தவருமான பத்மாசனிதேவி சீவரத்தினம் அவர்கள் 22.09.2023 வெள்ளிக்கிழமை அன்று இணுவிலில் இறைபதம் அடைந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான தம்பையா, ,ராசம்மா அவர்களின் மூத்த மகளும், காலஞ்சென்றவர்களான சுந்தரம், பாக்கியம், அவர்களின் மருமகளும் காலஞ்சென்ற சீவரத்தினம் அவர்களின் அன்பு மனைவியும், துவாரகாதேவி, சரோஜினிதேவி, சுசிலாதேவி, காலஞ்சென்றவர்களான வேலாயுதபிள்ளை, சோமசேகரம் (மோகன்), ஜெயரட்னம் (ஜெயம்) அவர்களின் சகோதரியும் கைலேஸ்வரி, சிவகுரு, கலாவதி மற்றும் காலஞ்சென்றவர்களான அமிர்தலிங்கம், நவரத்தினம், பரராஜசிங்கம், சீதாலக்சுமி, மங்களேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும் கேதீஸ்வரன் (தீசன்) கனடா, ரதிதேவி (சந்திரா) இலங்கை, பாக்கியலக்சுமி (காந்தி) அமரிக்கா, செல்வலக்சுமி (செல்லா) இலங்கை, விக்னேஸ்வரன் (கண்ணன்) கனடா, சாந்தலக்சுமி (சாந்தி) அமெரிக்கா, சத்தியலக்சுமி (பவானி) கனடா ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்றவர்களான சிவசாந்தினி, நாகராஜா, குலேந்திரராஜா, மற்றும் சண்முகபாஸ்கரன் (அமெரிக்கா), குமாரகுலசிங்கம் (சாம்) (அமெரிக்கா), யசோதா (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் மற்றும் தாரணி, அனுராகவன், அரவிந்தன், ராஜி, ரஜீவி, சாங்கரன், சரவணன், அகிலன், தர்மினி, கோகுலன், சாளினி, மகிந்தன், சத்திசாயினி, ஜனனி, கவி, கரி, பிரியங்கா, மீரா, அருண் அவர்களுடைய பேத்தியும் அருணன், வருணன், தருணன், யாதவன், புவனி, வர்ஷினி, அகல்யன், திசானி, கயன், கதிர், காவியா, மித்திரன், ரியா, அகிலா, லீனா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.09.2023) திங்கட்கிழமை இல 68, சுந்தரபவனம், இணுவில் கிழக்கு, இணுவிலிலுள்ள அவரது இல்லத்தில் முற்பகல் 11.00 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**077 155 9834** (CS 26370) M-1 **தகவல்: குடும்பத்தினர்.**

## வெளிப்படுத்துகை பொதுக்கூட்டம்

மக்கள் பங்கேற்புடனான அபிவிருத்தித் திட்டம் வெளிப்படுத்துகைப் பொதுக் கூட்டம் இன்று 25ஆம் திகதியும், 30ஆம் திகதியும் உள்ளூராட்சி மன்றங்களின் தலைமை அலுவலகங்களில் இடம்பெறவுள்ளன என்று பிராந்தியத்துக்கு உட்பட்ட உள்ளூராட்சி மன்றங்களுக்கு அறிவிக்குமாறு உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அறிவித்துள்ளார். (எ–159)

## துயர் பகிர்கின்றோம்

எமது கல்லூரி ஆங்கில ஆசிரியர்
**திருமதி ல.எட்வினா** அவர்களின் **தந்தையார்**
கடந்த 25.08.2023 அன்று இறைபதமடைந்தார்
அன்னாரது ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கின்றோம்.

**யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி**
**ஆசிரிய வட்டம்.**

(cs.52212) (N.1)


## யாழ் கலாலயா பயிற்சியகம்

விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம். (யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)

**மகளிருக்கான 3 மாத பயன்மிகு பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!**

*கேக் ஐசிங், உணவு தயாரித்தல், Hair Dressing & Beautician*
மணப்பெண் அலங்காரம்,பலவிதமான சேலை அணியும் வகுப்புகள்.
சனி, ஞாயிறு மற்றும் கிழமை நாள் பிரிவுகள் ஆரம்பமாக உள்ளன.
**மேலும் விபரங்களை நேரில் அறிந்து கொள்ளலாம்.**

## பணிப் பெண் தேவை

யாழ் நகரில் உள்ள
சிறிய குடும்பம் ஒன்றுக்கு
வீட்டில் தங்கியிருந்து
பணிபுரிய பணிப்பெண்
ஒருவர் தேவை.

தொடர்பு: **077 647 8362**

(cs 52249) (N-1)

## காணி விற்பனைக்கு

பச்சிலைப்பள்ளி அல்லிப்பளையில் 12 ஏக்கர்
தென்னந்தோட்டம் (இரண்டாக பிரித்தும்)
விற்பனைக்கு உண்டு. காய்க்கும் நிலையில் உள்ள
தென்னை, மாந்தோப்பு, வயல், கயூ மரங்கள்
மற்றும் வீடு, நீர்வசதி, மின்சார வசதி, கிணறு,
குழாய்கிணறு என்பன உடைய
தென்னந்தோட்டம் விற்பனைக்குண்டு.
தரகர்கள் தேவையில்லை
நேரடியாக தொடர்புகொள்ளவும்.

தொடர்பு: **077 941 6766**
**077 667 2713**

(cs 52219) (N-1)


## மரண அறிவித்தல்



### பஞ்சாட்சரம் பவானி (கிளி)

தாவடி வடக்கை பிறப்பிடமாகவும் சுதுமலை தெற்கை வதிவிடமாகவும் கொண்ட பஞ்சாட்சரம் பவானி (கிளி) நேற்று (24.09.2023) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சீவரத்தினம் நேசம்மாவின் அன்பு மகளும் சுப்பிரமணியம் வள்ளிநாயகியின் அன்பு மருமகளும் பஞ்சாட்சரத்தின் அன்பு மனைவியும் சிவானி, தர்மசீலன், தாட்சாயினி, சிவப்பிரியன், கலைவாணி, சிவகலா ஆகியோரின் அன்பு தாயாரும் கயன், ஜனார்த்தனி, சுயன், டர்சிகா, உசாந்தன் ஆகியோரின் அன்பு மாமியாரும் சாருயன், பிறைநிலா, சாங்கவி, அங்கவி, மதுசன், விதுசன், யதுசன் ஆகியோரின் அன்பு பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (25.09.2023) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தாவடி இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


**தகவல்:**
**கணவர் பஞ்சாட்சரம்,**
**பிள்ளைகள் மற்றும் மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

**சுதுமலை தெற்கு,**
**மானிப்பாய்.**

(CS 26369)M-1

## நினைவலைகள்

**1ஆம் ஆண்டு** | **2ஆம் ஆண்டு**



### சடையன் வீரகத்தி

மலர்வு 07.02.1927 — உதிர்வு 06.09.2022

**திதி: ஆவணி மாத வளர்பிறை ஏகாதசி**



### வீரகத்தி தங்கம்மா

மலர்வு 27.01.1940 — உதிர்வு 03.12.2021

**திதி: கார்த்திகை மாத அமாவாசை**

ஆறுதல் சொல்ல ஆயிரம் உறவு இருந்தாலும்
தாய் தந்தை உறவு போல வருமோ இவ்வுலகில்
நாங்கள் என்றும் உங்களை மறவோம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய நாச்சுமாரை
பிரார்த்திக்கின்றோம்.

**கைதடி தெற்கு,**
**கைதடி.**

(ct.40608) (N.1)

*உங்கள் பிரிவால் துயருறும்*
**சிவசுப்பிரமணியம் இராணி**
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**PURSUE IMMIGRATION CONSULTING SERVICES**

RCIC-IRB Regulated Canadian Immigration Consultant

May Your Canada Immigration Dreams Come True

- VISITOR VISA-SINGLE ENTRY
- VISITOR VISA-MULTIPLE ENTRY
- SUPER VISA
- STUDENT VISA
- REFUGEE CASES
- WORK VISA, LMIA
- PERMANENT RESIDENCY
- PNP APPLICATIONS
- SELF-EMPLOYED CATEGORY
- FAMILY SPONSORSHIPS
- BUSINESS INVESTORS
- REFUSAL CASES AND APPEALS
- PR CARD RENEWALS
- CITIZENSHIP APPLICATIONS

Contact Us:

0016479893136
0016472053136
vicky.aingkaran@gmail.com
30 Via Renzo Drive, Richmond Hill, ON, L4S 0B8, Canada





# முல்லையில் மருத்துவ முகாம்

முல்லைத்தீவு, செப். 25

முல்லைத்தீவு - மாந்தை கிழக்கு சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனைக்குட்பட்ட பாண்டியன் குளம் மகா வித்தியாலயத்தில் இலவச மருத்துவ முகாம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றது.

யாழ்.போதனா மருத்துவமனையின் மருத்துவ நிபுணர்கள், மருத்துவர்கள், மல்லாவி மருத்துவமனை மருத்துவர்கள், தாதியர்கள், சுகாதார உத்தியோகத்தர்கள் கொண்ட மருத்துவக் குழுவினர் இணைந்து இந்த மருத்துவ முகாமை நடத்தினர். மருத்துவ முகாமில் 400க்கும் மேற்பட்டோர் பங்கேற்று பயன் பெற்றனர். (ச-125)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். குடும்பத்தில் உறவினர்களால் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். பொறுமையைக் கடைப்பிடிக்கவும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும்.

**இடபம்:** வாழ்க்கைத்துணை வழியில் செலவுகள் ஏற்படும். போதுமான பணம் இருப்பதால் சமாளித்துவிடுவீர்கள். மற்றவர்களுடன் மனஸ்தாபம் ஏற்படக்கூடும். பேசும் வார்த்தைகளில் கவனம் தேவை.

**மிதுனம்:** மனதில் இனம் தெரியாத குழப்பங்கள் ஏற்பட்டு விலகும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். உறவினர்களால் ஓரளவு அனுகூலம் ஏற்படலாம். அவர்களால் பிரச்சினைகளும் ஏற்படக்கூடும்.

**கடகம்:** நண்பர்களால் ஆதாயம் கிடைக்கும். காரியங்கள் அனுகூலமாக முடியும். உறவினரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். திடீர் பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. இடையூறுகள் நீங்கும்.

**சிம்மம்:** உற்சாகமான நாள். தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. தொடங்கும் முயற்சி சாதகமாக முடியும். உற்சாகம் பிறக்கும். திடீர் பணவரவுக்கு வாய்ப்புண்டு.

**கன்னி:** நீங்கள் தொடங்கும் புதிய முயற்சி சாதகமாக முடியும். உறவினர்களால் ஆதாயம் உண்டாகும். வியாபாரத்தில் மனஸ்தாபம் ஏற்படக்கூடும். பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**துலாம்:** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவுகளை இன்று எடுக்கலாம். செலவுகள் ஏற்படும். உடல் நலனில் கவனம் தேவை.

**விருச்சிகம்:** எதிர்பாராத பணவரவுடன், திடீர்ச் செலவுகளும் ஏற்படும். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். நண்பர்கள் கேட்கும் உதவியை மகிழ்ச்சியுடன் செய்து தருவீர்கள்.

**தனுசு:** உற்சாகமாகக் காணப்படுவீர்கள். எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. ஆனாலும், புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். ஆதாயம் உண் டாகும். கருத்தொற்றுமை ஏற்படும்.

**மகரம்:** தேவையான பணம் கையில் இருந்தாலும், தேவையற்ற செலவுகளும் ஏற்படக்கூடும். வெளியில் செல்ல நேரிட்டால் நன்றாக திட்டமிட்டுக்கொண்டு கவனமாகச் செல்லவும்.

**கும்பம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் திடீர் செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு. பிள்ளைகளின் பிடிவாதப் போக்கு மாறி, உங்கள் அறிவுரைப்படி செயற்படுவார்கள்.

**மீனம்:** எடுத்த காரியங்களில் வெற்றி உண்டாகும். மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். மகிழ்ச்சி உண்டாகும். தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். சகோதரர்கள் உதவி கேட்டு வருவார்கள்.

### புரட்டாதிச் சனி விரதம்

# எள்ளெண்ணெய் சிட்டி வியாபாரம் சூடுபிடிப்பு

யாழ்ப்பாணத்தில் எள்ளெண்ணெய் சிட்டி வியாபாரம் நேற்றையதினம் சூடுபிடித்துக் காணப்பட்டது.

இந்துக்கள் வழிபாடாற்றும் விரதங்களில் ஒன்றான சனீஸ்வர பகவானுக்குரிய புரட்டாதிச் சனி விரதம் நேற்று முன்தினம் சனிக்கிழமை ஆரம்பமாகியது.

அதனையடுத்தே யாழ். சிவன் கோயில், வெங்கடேசப் பெருமாள் ஆலயச் சூழல்களில் எள்ளெண்ணெய் சிட்டி, எள்ளுப் பொட்டணி என்பவற்றின் வியாபாரம் சூடுபிடித் திருந்தது. (ச-66)




கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் ஆங்கில மன்றம் நடத்திய நூற்றாண்டுகால ஆங்கிலத் தின விழா கடந்த வெள்ளிக்கிழமை கலாசாலையின் ரதிலட்சுமி மண்டபத்தில் கலாசாலை முதல்வர் ச. லலீசன் தலைமையில் நடைபெற்றது. (ச-66)

# ஹாட்லிக் கல்லூரியில் கல்விக் கண்காட்சி

யாழ்ப்பாணம், செப்.25

ஹாட்லிக் கல்லூரியால் நடத்தப்படும் கல்விக் கண்காட்சி இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகி இரு நாள்கள் நடைபெற உள்ளது.

ஹாட்லிக் கல்லூரி மாநாட்டு மண்டபத்தில் காலை 8 மணிக்கு ஆரம்பமாகும் கல்விக் கண்காட்சி பிற்பகல் 4 மணிவரை இடம்பெறவுள்ளது. நாளையும் காலை 8 மணி முதல் பிற்பகல் 4 மணிவரை கண்காட்சி இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-100)







### உ/த பரீட்சை கலைப்பாடத்தில்

# வரணி மத்தி மாணவி சுவர்க்கா யாழ்.மாவட்டத்தில் முதல்நிலை!

யாழ்ப்பாணம், செப். 25

வெளியாகிய 2022ஆம் ஆண்டுக்கான உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளில் வரணி மத்திய கல்லூரி மாணவி இ.சுவர்க்கா கலைப்பிரிவில் 3'ஏ' சித்திகளைப் பெற்று மாவட்ட மட்டத்தில் முதலிடம் பெற்றுள்ளார்.

அத்துடன் கலைப்பிரிவில் து.ஜதுசா 3 'ஏ' சித்தியை பெற்று மாவட்ட மட்டத்தில் 6 ஆம் நிலையையும், சி.சாதனா 3'ஏ' சித்தி பெற்று மாவட்ட மட்டத்தில் 76ஆவது நிலையையும் பெற்று பாடசாலைக்குப் பெருமை சேர்த்துள்ளனர். (ச-159)

### சமூக விஞ்ஞானப் போட்டி

# வரணி மத்திய கல்லூரியின் மாணவர்கள் தேசியத்துக்கு!

யாழ்ப்பாணம், செப். 25

இந்த ஆண்டுக்கான மாகாண மட்ட சமூக விஞ்ஞானப் போட்டியில் வரணி மத்திய கல்லூரியைச் சேர்ந்த 6 மாணவர்கள் வெற்றியீட்டி தேசிய மட்டப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளனர். வெற்றியீட்டிய மாணவர்கள் பாடசாலையின் சமூக விஞ்ஞான மன்றத்தால் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர். (ச-159,100,20)



# நல்லூர் உற்சவ கால சிறப்பு இசை நிகழ்ச்சி

யாழப்பாணம், செப். 25

மிருதங்க வித்துவான் பிரம்மஸ்ரீ சுவாமி நாதன் சர்மாவின் 'இசை அர்ச்சனை' குழுவினர் வழங்கிய நல்லூர் உற்சவகால சிறப்பு இசை நிகழ்ச்சி நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் இடம்பெற்றது.

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற நிகழ்வில் வாசுகி சுவாமி நாதன் சர்மா, நந்தினி சுவாமிநாதன் சர்மா, எஸ். அரவிந்தன் சுப்பிரமணியம் சர்மா, எஸ். அனந்த நாராயணன் சர்மா, பிரம்மஸ்ரீ ஏ.ஜி.எஸ். சுவாமி நாதன் சர்மா ஆகிய கலைஞர்கள் பங்கேற்றனர். (ச)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்திரராயன் ‘அவுட்’

## மீண்டும் உயிர்ப்பிப்பதற்காக இஸ்ரோ தீவிர முயற்சி



புதுடில்லி, செப். 25

**நிலவில் உறக்க நிலையில் உள்ள சந்திரயான்-3 வின் கலத்தின் லாண்டர், ரோவர் கலன்களை மீண்டும் செயற்பாட்டுக்குக் கொண்டு வருவதற்கான பணிகளை இஸ்ரோ விஞ்ஞானிகள் முன்னெடுத்துள்ளனர்.**

இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) அனுப்பிய சந்திரயான்-3 விண்கலத்தின் 'விக்ரம்' லாண்டர், 'பிரக்யான்' ரோவர் வாகனம் ஆகியன ஓகஸ்ட் மாதம் 23ஆம் திகதி நிலவின் தென்துருவப் பகுதியில் வெற்றிகரமாகத் தரையிறக்கப்பட்டன. லாண்டர் தரையிறங்கிய இடத்தில் இருந்தபடியும், ரோவர் நிலவின் மேற்பரப்பில் ஊர்ந்து சென்றும் 12 நாள்கள் ஆய்வு செய்து பல அரிய தகவல்களை எமக்கு அனுப்பின. அதன் மூலம் நிலவின் வெப்பநிலை, அங்குள்ள தனிமங்கள், நிலஅதிர்வின் தன்மை உள்ளிட்ட முக்கியமான அம்சங்கள் கண்டறியப்பட்டன.

இதற்கிடையே, நிலவின் தென்துருவப் பகுதியில் இரவு சூழல் வந்துவிட்டதால் ரோவர், லாண்டர் கலன்களின் இயக்கமானது முன்னெச்சரிக்கையாக உறக்க நிலையில் வைக்கப்பட்டன.

ஏனெனில், லேண்டர், ரோவர் கலன்கள் சோலர் பனல்கள்மூலம் கிடைக்கும் சூரிய மின்சக்தியைக் கொண்டே இயங்குகின்றன.

இரவு நேரத்தில் அவற்றால் மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியாது என்பதால் இரு கலன்களும் முழுமையாக சார்ஜ் செய்யப்பட்டு, அவை உறக்க நிலைக்கு மாற்றப்பட்டன.

நிலவில் பகல் பொழுது வந்ததும் லேண்டர், ரோவர் கலன்களைக் செயற்பாட்டுக்கு கொண்டுவருவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்று இஸ்ரோ அறிவித்திருந்தது. அதன்படி தென்துருவப் பகுதியில் தற்போது சூரிய உதயம் தொடங்கியுள்ளதாகத் தகவல் கிடைத்துள்ளது.

இந்நிலையில், திட்டமிட்டபடி லாண்டர், ரோவர் கலன்கள் செப்ரெம்பர் மாதம் 22ஆம் திகதி உயிர் பெற்றிருக்கவேண்டும். ஆனால், அவ்வாறு மீள உயிர்ப்பிப்பது சாத்தியமற்றதாகியுள்ளது என்று இஸ்ரோ அறிவித்தது. ஆனால், திட்டத்தைக் கைவிடவில்லை என்றும் தொடர்ந்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் இஸ்ரோ மேலும் தெரிவித்துள்ளது.

**மைனஸ் 200 டிகிரி குளிர்**

நிலவில் இரவு நேரத்தில் மைனஸ் 200 டிகிரிக்கு மேலாகக் குளிர் நிலை இருக்கும். அதனால் லாண்டர், ரோவரில் உள்ள சாதனங்கள், இயந்திரங்கள் குளிர்ந்த சீதோஷ்ண சூழலில் சேதமடையாமல் மீண்டும் இயங்கவேண்டும். அதற்கான சில முன்தயாரிப்புகளை இஸ்ரோ செய்திருந்தாலும், அவை முழுமையாகப் பயன்தரும் என்று கூறமுடியாது. (ம)

# கணவர் கொலை மனைவி கைது!

கொழும்பு, செப். 25

நுவரெலியா - விஜிதபுர பகுதியில் கணவரை குத்திக் கொலை செய்த குற்றச்சாட்டில் மனைவி கைதுசெய்யப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு நடந்துள்ளது.

ஒரு பிள்ளையின் தந்தையான பஹிதரன் சந்திரசேகரன் (வயது-33) என்பவரே உயிரிழந்தவராவார். கணவன், மனைவிக்கிடையே ஏற்பட்ட வாக்குவாதம் கைகலப்பாக மாறியதில் மனைவியின் கத்திக்குத்துக்கு இலக்காகி கணவன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார் என்று முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச-44)

# இம்மாதத்தில் மட்டும் 2,000 டெங்கு நோயாளர்கள்



கொழும்பு, செப்.25

நாட்டில் இந்த மாதத்தில் இதுவரையான காலப்பகுதியில் 2 ஆயிரத்துக்கும் அதிகமான டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று தேசிய டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

அண்மைய நாள்களாகப் பெய்துவரும் மழையால் இந்த எண்ணிக்கை அதிகரித்துள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது. அதற்கமைய இந்த மாதத்தில் இதுவரையில் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். கடந்த மாதங்களுடன் ஒப்பிடுகையில் இந்த மாதத்தில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை குறைவடையும் சாத்தியம் உள்ளதென சுகாதார அமைச்சு எதிர்வு கூறியிருந்தது.

எனினும், இந்த மாதத்தின் மூன்றாவது வாரத்தில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

டெங்கு அபாய வலயங்கள் 7 ஆகக் குறைவடைந்துள்ள போதிலும், தற்போதைய மழையுடனான வானிலையால் அதன் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடுமென சுகாதாரப்பிரிவு தெரிவித்துள்ளது. (ச-இ)

# கேலிச்சித்திர ஊடகர் அஸ்வினின் நினைவேந்தல்!



யாழ்ப்பாணம், செப். 25

மறைந்த ஊடகவியலாளரும், கேலிச்சித்திரக் கலைஞருமான அஸ்வின் சுதர்சனின் 7ஆம் ஆண்டு நினைவேந்தலும் ஞாபகார்த்த ஊடகக் கற்கை மாணவருக்கான புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வும் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது.

நிகழ்வில் ஊடகக் கற்கைநெறியைப் பயிலும் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான புலமைப்பரிசில்களும் வழங்கப்பட்டன. (ச-27)




# தேசியமட்ட கணிதப்போட்டி கிழக்கு அணி முதலாமிடம்

திருகோணமலை, செப். 25

கல்வி அமைச்சால் நடத்தப்பட்ட தேசியமட்ட கனிஷ்ட பிரிவு கணிதப் போட்டியில் கிழக்கு மாகாண மாணவர் அணி முதலாமிடத்தைப் பெற்றுள்ளது.

குறித்த போட்டித்தொடரின் இறுதிப் போட்டி மீப்பே கல்வித் தலைமைத்துவ அபிவிருத்தி நிலையத்தில் கடந்த 21ஆம் திகதி இடம்பெற்றது. இதில் நாட்டின் 9 மாகாணத்தைச் சேர்ந்த அணிகளும் பங்கேற்ற நிலையில் கிழக்கு மாகாண அணி வெற்றி பெற்றுள்ளது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிளிநொச்சி மாவீரர் போராளி குடும்ப நல காப்பகத்தின் ஏற்பாட்டில் நேற்று வட்டக்கச்சி பிரதேச மருத்துவமனையில் குருதிக்கொடை நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது. (எ-113)

## தியாகதீபம்...

கடந்த 15ஆம் திகதி முதல் தியாக திலீபனை நினைவுகூரும் நிகழ்வுகள் தமிழ் மக்களால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. தியாகதீபம் திலீபன் உணவு தவிர்ப்புப் போராட்டம் நடத்திய நல்லூரில் தினமும் அஞ்சலி நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன. அங்கு தியாகி திலீபனின் வரலாற்றை அடுத்த சந்ததிக்குக் கடத்தும் வகையில் ஆவணக் காட்சியகம் ஒன்றும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பெருமளவான மக்கள் ஆவணக்காட்சியகத்தைப் பார்வையிட்டு வருகின்றனர்.

தியாக திலீபனின் நினைவேந்தலின் இறுதிநாள் நினைவேந்தல் நிகழ்வுகள் யாழ்ப்பாணம் நல்லூரிலும் தமிழர் தாயகத்தின் ஏனைய இடங்களிலும், புலம்பெயர் தேசங்களிலும் நாளை கடைப்பிடிக்கப்படவுள்ளது. அதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

நாளை செவ்வாய்க்கிழமை காலை 7.30 மணிக்கு தியாகதீபம் திலீபன் பிறந்த ஊரான ஊரெழுவில் இருந்து தியாகதீபம் திலீபனின் திருவுருவம் தாங்கிய நினைவு ஊர்தி நல்லூரை நோக்கித் தனது பயணத்தை ஆரம்பிக்கும்.

நல்லூர் கிட்டுப் பூங்காவை நினைவு ஊர்தி சென்றடைந்ததும், காலை 8 மணிக்கு அங்கிருந்து நல்லூர் ஆலயத்தின் பின்புறம் உள்ள நினைவுத் தூபியை நோக்கிய நடைபவனி கிட்டுப் பூங்காவில் இருந்து ஆரம்பமாகும்.

தியாகதீபம் திலீபன் உயிர்நீத்த முற்பகல் 10.48 மணிக்கு நல்லூர் ஆலய முன்றிலில் தியாகதீபம் திலீபன் உணவு தவிர்ப்புப் போராட்டம் நடத்திய இடத்திலும், நல்லூர் ஆலயத்தின் பின்புறம் உள்ள தியாகதீபம் திலீபன் நினைவுத் தூபியும் நினைவேந்தல் நிகழ்வு சம நேரத்தில் நடைபெறும். தியாகதீபம் திலீபனுக்கு சுடரேற்றி, மலரஞ்சலி செலுத்தவும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நாளை நினைவேந்தல் நிகழ்வுக்காக தியாகதீபம் திலீபனின் நினைவுத் தூபியை அண்மித்த பருத்தித்துறை வீதியில் போக்குவரத்து காலை 7 மணி முதல் நண்பகல் 12 மணிவரை தடைப்படும். அந்தவீதியூடாகப் பயணிப்போர் மாற்றுவழிகளைப் பயன்படுத்தவேண்டும் என்று தியாகதீபம் திலீபன் நினைவேந்தல் ஏற்பாட்டுக் குழுவினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் அரசியல்துறைப் பொறுப்பாளராக இருந்த திலீபன் 1987ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 15ஆம் திகதி ஐந்து அம்சக் கோரிக்கையை இந்திய அரசாங்கத்திடம் முன்வைத்துத் தனது அகிம்சைப் போராட்டத்தை ஆரம்பித்தார். மீளக்குடியமர்தல் என்ற பெயரில் வடக்கிலும் கிழக்கிலும் புதிதாகத் திட்டமிடும் குடியேற்றங்களைத் தடுத்து நிறுத்த வேண்டும், சிறைக் கூடங்களிலும் இராணுவ பொலிஸ் தடுப்பு முகாம்களிலும் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் யாவரும் விடுதலை செய்யப்படவேண்டும், அவசரகாலச் சட்டம் முழுமையாக நீக்கப்படவேண்டும், ஊர்காவல் படையினருக்கு வழங்கப்பட்ட ஆயுதங்கள் முற்றாகக் களையப்படவேண்டும், தமிழர் பிரதேசங்களில் புதிதாக பொலிஸ் நிலையங்களைத் திறப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் முற்றாக நிறுத்தப்படவேண்டும் என்ற அவரது கோரிக்கைகளுக்கு காத்திரமான பதிலைதையும் வழங்காது இந்திய அரசாங்கம் இழுத்தடித்துப் புறக்கணித்தது.

நீர்கூட அருந்தாது தனது உணவு தவிர்ப்புப் போராட்டத்தைத் தொடர்ந்த திலீபன், 1987ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 26ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10.48 மணிக்கு தன்னுயிரை, தான் நேசித்த மக்களுக்காக நீத்தார். (அ-எ-66)

## அமெ. எரிபொருள்...

நிறுவனம் கடந்த ஜூன் மாதம் ஒப்பந்தம் செய்துள்ளது. இந்த ஒப்பந்தம் 20 ஆண்டுகளுக்குச் செல்லுபடியாகும்.

இந்த நிறுவனத்துக்கு முதலில் இலங்கை கனியவளக் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான 150 எரிபொருள் நிரப்பு நிலையங்கள் வழங்கப்படும் என்றும், பின்னர் 50 எரிபொருள் நிரப்பு நிலையங்களைச் சொந்தமாக ஆரம்பிக்க வாய்ப்பு வழங்கப்படும் எனக் கூறப்படுகின்றது.

அதேவேளை, கடந்த ஓகஸ்ட் மாத இறுதியில் சீனாவின் 'சினோபெக்' நிறுவனம் எரிபொருள் விநியோகத்தை ஆரம்பித்துள்ளது. அதன் எரிபொருள் நிரப்பு நிலையங்கள் நாட்டின் இரு இடங்களில் நிறுவப்பட்டுள்ளன.

'சினோபெக்' நிறுவனம் அனைத்து வகையான எரிபொருள்களையும் ஏனைய எரிபொருள் வழங்குநர்களின் விலைகளில் இருந்து 3 ரூபா குறைத்து விற்பனை செய்கின்றது.

அதேபோன்று 'ஆர்.எம்.பார்க்ஸ்' நிறுவனமும் உள்ளூர்ச் சந்தை விலையிலும் குறைந்த விலையில் எரிபொருளை விற்பனை செய்யலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (அ-எ-இ)

## மீலாத்துல்...

எதிர்வரும் 28ஆம் திகதி நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த தேசிய மீலாத்துல் நபி விழா அன்றைய தினம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டில் இருக்கமாட்டார் என்பதால் திகதி குறிப்பிடப்படாது பிற்போடப்பட்டுள்ளது.

தேசிய மீலாத்துல் நபி விழாவை இந்த முறை மன்னார் மாவட்டத்தில் உள்ள முசலி பிரதேச செயலர் பிரிவில் நடத்தத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பான மீளாய்வுக் கூட்டம் கிராமிய, பொருளாதார இராஜாங்க அமைச்சரும், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான காதர் மஸ்தான் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. அங்கு கருத்துத் தெரிவித்தபோதே இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

தேசிய மீலாத்துல் நபி விழா பிற்போடப்பட்டுள்ளது. இந்த விழாவை அடுத்த மாதத்தில் முதல் அல்லது இரண்டாம் வாரத்தில் நடத்த எதிர்பார்க்கின்றோம். ஜனாதிபதி ரணில் விக்கிரமங்க இந்த விழாவில் நிச்சயம் கலந்துகொள்ள வேண்டும் என்று எதிர்பார்ப்பதால் அவருக்கு ஏற்ற திகதியை அறிந்து, விழாவுக்கான திகதி இறுதி செய்யப்படும். இந்த விழாவுக்காக அரசாங்கம் 11.5 மில்லியன் ரூபா ஒதுக்கியுள்ளது என்றும் இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் தெரிவித்தார். (அ-எ-60)

## கடத்திச்சென்று...

கடுமையாகத் தாக்கிய பின்னர், கைபேசி மற்றும் கைக்கடிகாரம் என்பவற்றைக் கொள்ளையிட்டுச் சென்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. இதுதொடர்பாக மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்தச் சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவுப் பதில் பொறுப்பதிகாரி உபபொலிஸ் பரிசோதகர் பிரதீப் தலைமையிலான பொலிஸ் குழு விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக நேற்று 3 சந்தேகநபர்கள் யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

சந்தேகநபர்களிடம் இருந்து இரு மோட்டார் சைக்கிள்களும், கொள்ளையிடப்பட்டதாகக் கருதப்படும் கைக்கடிகாரம் ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது.

சந்தேகநபர்கள் மானிப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். மேலதிக விசாரணைகளை மானிப்பாய் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (அ-எ-26)

## தாய்ப்பால்...

உயிரிழந்துள்ளது. நேற்றுக்காலை தாய்ப்பால் அருந்திய பின்னர் குழந்தை ஏணையில் இடப்பட்டது. சிறிதுநேரத்தின் பின்னர் குழந்தை அசைவற்றிருப்பதை அவதானித்த பெற்றோர், குழந்தையை சங்கானை மருத்துவமனைக்குக் கொண்டு சென்றுள்ளனர்.

குழந்தையைப் பரிசோதித்த மருத்துவர்கள் குழந்தை உயிரிழந்துவிட்டது என்று அறிக்கையிட்டுள்ளனர்.

இறப்பு விசாரணைகளை வலிகாமம் கிழக்கு திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (அ-எ-26)

## சாந்தனை...

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டுக் கைது செய்யப்பட்ட சாந்தன் 32 ஆண்டுகள் சிறைவைக்கப்பட்டிருந்தார். அவர் பின்னர் நீதிமன்றால் விடுவிக்கப்பட்டபோதும், கடந்த 10 மாதங்களாக திருச்சியில் உள்ள சிறப்பு முகாமில் தனியறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

இந்த விவகாரத்தில் கடந்தவாரம் அந்நாட்டு நீதிமன்றத்துக்கு இந்திய அரசாங்கம் வழங்கிய பதிலொன்றில், 2022 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் இலங்கை வெளிவிவகார அமைச்சிடம் ஆவணங்களைக் கேட்டுப் பொறுப்பளிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில் சாந்தனை நாட்டுக்கு அழைத்துவர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவரது தாயார் கடிதம் மூலம் கோரியுள்ளார்.

சாந்தனின் தாய் கடந்த 10 மாதங்களில் இலங்கை வெளிவிவகார அமைச்சுக்கு அனுப்பும் 5ஆவது கடிதம் இதுவாகும். இந்தக் கடிதங்கள் தொடர்பில் இலங்கை வெளிவிவகார அமைச்சு எந்தப் பதிலையும் வழங்கவில்லை என்று சாந்தனின் உறவினர்கள் கூறுகின்றனர்.

சாந்தனிடம் இலங்கைக் கடவுச்சீட்டு உள்ளது என்றும், வெளிவிகார அமைச்சுக்கு அனுப்பும் கடிதங்களுடன் சாந்தனின் பிறப்புச்சான்றிதழ்களும் இணைக்கப்பட்டே அனுப்பப்படுகின்றன என அவர்கள் மேலும் குறிப்பிட்டனர். (அ-எ-100)

## கிணற்றில்...

அதே இடத்தைச் சேர்ந்த ஆறுமுகம் துரைராசா (வயது-51) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் இரவு 8.30 மணியளவில் வீட்டில் இருந்து புறப்பட்டுச் சென்ற இவர் வீடு திரும்பவில்லை. நேற்றுக்காலை வீட்டுக்கு அருகில் உள்ள தோட்டக் கிணறு ஒன்றில் இருந்து அவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இறப்பு விசாரணைகளை வலிகாமம் கிழக்கு திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். இவர் தோட்டக் கிணற்றில் தவறி வீழ்ந்ததாலேயே உயிரிழந்திருக்கலாம் என்று கூறப்படுகின்றது. (அ-எ-26-27)

## ரயில் முன்...

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிரேமகுமார் மேற்கொண்டார்.

உயிரிழந்தவர் நீண்டநாள்களாக கால் வலியால் அவதியுற்று வந்தார் என்றும், நேற்று அதிகாலை வீட்டில் இருந்து வெளியேறிச் சென்ற இவர் ரயிலின் முன்னால் பாய்ந்து, அதனோடு மோதுண்டு உயிரிழந்துள்ளார் என்றும் இறப்பு விசாரணைகளின்போது தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-எ-26-9)

## திலீபன்...

அஞ்சலி செலுத்தினார். தியாகதீபம் திலீபனின் 36ஆவது ஆண்டு நினைவேந்தல் தற்போது கடைப்பிடிக்கப்பட்டு வரும் நிலையில், தியாகி திலீபனின் வரலாற்றை அடுத்த சந்ததிக்குக் கடத்தும் வகையில் ஆவணவக் காட்சியகம் ஒன்று நல்லூரில் உள்ள தியாகதீபம் திலீபன் நினைவுத் தூபிக்கு அருகில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

"பார்த்தீபன் திலீபனாக!, திலீபன் தியாக தீபமாக" என்ற இந்த ஆவணக் காட்சியகத்தில் தியாகதீபம் திலீபனின் வரலாற்று ஆவணங்கள், தியாகதீபம் திலீபன் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்ட காலகட்டத்தில் வெளியாகிய பத்திரிகைத் தலைப்புக்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

இந்த ஆவணக் காட்சியகத்தைப் பெருமெண்ணிக்கையான மக்கள் குடும்பமாக வந்து பார்வையிட்டு வருகின்றனர். (அ-எ-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் உறுதிப்பாட்டுக்கு கருத்துச் சுதந்திரம் தேவை

## அமெரிக்கத் தூதுவர் வலியுறுத்து

கொழும்பு, செப். 25
கருத்துச் சுதந்திரத்தின் மதிப்புகளை தியாகம் செய்வதன் மூலம் அரசியல் ஸ்திரத்தன்மையைப் பெற்றுக் கொள்ளக்கூடாது. நாங்கள் எதிர்காலம் குறித்த இலட்சியத்துடனேயே செயற்படவேண்டும் என்று இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் கொழும்பில் இடம்பெற்ற சர்வதேச சமாதான நிகழ்வில் பங்கேற்று உரையாற்றுகையில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

உலக நாடுகள் மத்தியில் சமாதானம் என்பது கரங்களில் சிக்காத விடயமாகயிருக்கிறது. குறிப்பாக உக்ரைனின் மீதான ஈவிரக்கமற்ற ஆக்கிரமிப்பு, சூடானின் மனிதாபிமான நெருக்கடி போன்றவற்றின் மூலம் இதனை நாங்கள் பார்க்கமுடிகின்றது.

சமாதானம் என்பது ஒருநாள் காணப்படும். மறுநாள் மாற்றமடையும் அல்லது இல்லாமற்போகும். மீண்டும் சமாதானத்தை ஏற்படுத்த பல வருடங்கள் எடுக்கலாம். நாங்கள் எதிர்காலம் குறித்து இலட்சியத்துடன் இருப்போம். பொருளாதார ஸ்திரத்தன்மை, அரசியல் ஸ்திரத்தன்மையில் புதுமை வேண்டும். ஆனாலும் கருத்துச் சுதந்திரத்தை இழந்து ஸ்திரத்தன்மையைப் பெற்றுக்கொள்ளக்கூடாது - என்றார். (ச-இ)


ALLIANCE FRANCAISE DE JAFFNA

af பிரெஞ்சு மொழி

- யாழ்ப்பாணத்தில் French Embassy கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் Alliance Francaise மட்டுமே.
- அங்கீகரிக்கப்பட்ட Certificates International Diplomas (delf)
- தமிழ் மொழிமூலம் பிரஞ்சு நாட்டு ஆசிரியரினாலும் கற்பிக்கப்படும்
- French Embassy இன் அனுமதியுடன் திருமண அத்தாட்சிப் பத்திரங்கள் தமிழ் மொழி மூலம் மொழி பெயர்ப்புச் செய்து கொடுக்கப்படும். (இங்கே மட்டும்).



021 222 8093 17, Kandy Road, Jaffna


## பஸ்ஸில் பயணித்தவரை கடத்தியது ஆயுதக்குழு!

கொழும்பு, செப். 25
பேருந்தொன்றை 'ஹைஏஸில்' வந்த குழுவொன்று வழிமறித்து அதில் பயணித்த ஒருவரை ஆயுதத்தால் தாக்கி தமது வாகனத்தில் ஏற்றிக் கடத்திச் சென்றுள்ளது.

இந்தச் சம்பவம் கம்பளை, ஜயமாலபுர பகுதியில் நேற்றுமுன்தினம் காலை இடம்பெற்றுள்ளது.

கம்பளையிலிருந்து மாவெல பகுதியை நோக்கிப் பயணித்த பேருந்து ஒன்றையே வழிமறித்து இந்தக் கடத்தல் சம்பவம் இடம்பெற்றுள்ளது. சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை கம்பளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ச-இ)


காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் நாவற்குழியில் 42 பரப்பு (நிலப்பரப்பு) விற்பனைக்கு உண்டு.
* வீடு கட்டுவதற்கும், களஞ்சியசாலைகள் அமைப்பதற்கும் நல்ல சூழல்
* நாவற்குழி சந்தியிலிருந்து 1/2 கிலோ மீற்றர் தூரம்
* A-9 வீதியிலிருந்து 200 மீற்றர் தூரம்
* யாழ். பஸ் நிலையம் 3 1/2 கிலோமீற்றர் தூரம்
* இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
* நன்னீர் ஊற்று
* ஒரு பரப்பின் விலை 3 இலட்சம் (300000/=)
* தரகர் தேவையில்லை

தொடர்பு:- 077 6234 204
076 7558 606
077 076 0389

(CS 26250)M-1

காணி விற்பனைக்கு

கோப்பாய் வடக்கு தபால் பெட்டி வீதியில் மூன்று பரப்பு காணி விற்பனைக்கு உண்டு பருத்தித்துறை பிரதான வீதியில் இருந்து 50 மீற்றர் தூரத்தில்

077 9231 945

காணி விற்பனைக்கு

புத்தூர் மீசாலை வீதியில் வேம்பிராய் சந்தியி லிருந்து 100m தூரத்தில் 19 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தரகர் இல்லை.

(cr 40612) (n.1)

Phone No. 077 924 0502
Email - gunavathanyk@gmail.com

31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்
சின்னத்தம்பி லோகநாதன்

திதி : வளர்பிறை ஏகாதசி

வார்த்தை தடுமாறுகின்றதே
நேற்றுக் கண்ட உமை நினைத்து
நெஞ்சம் உருமாறுகின்றதே!!
காந்தமாய் எமையீர்த்த உமை
காலனுனை கவர்ந்து சென்றதேனோ?
காலமெல்லாம் உம் உறவு
நினைத்துருக காததூரம் எம்மை விட்டு
சென்றதேனோ? நாமோ !! இன்று
மங்காத உம் நினைவால்
மயங்கியே நிற்கின்றோம்.

இன்று (25.09.2023) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் இணுவில் சிவகாமி மண்டபத்தில் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் அதனைத்தொடர்ந்து மதியபோசன நிகழ்வும் நடைபெறும்.

தோற்றம் 24.06.1961

மறைவு 26.08.2023

விவேகானந்தா வீதி,
மஞ்சத்தடி, இணுவில்.

குடும்பத்தினர்

(cs 52250) (N.1)


செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 25.09.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org